கல்கி

24-11-68

விலை 20 காசு

புகழை வளர்ப்போம்!

—கவிஞர் மணிவேந்தன் எம்.ஏ.,—

வானை நிகர்த்தபுகழ் தேனை நிகர்த்தமொழி
    வண்ணம் இழந்து விடவா?—அட
ஆனை நிகர்த்தவனே! பூனை நிகர்த்தவரின்
    ஆணை நமக்கு நலமோ?

பொன்னித் திருநதியால் பொங்கும் பெருவளத்தைப்
    புல்லர் எடுத்துச் செலவோ?—நம்
கன்னித் தமிழினமும் கண்கள் கலங்கியுமே
    காட்சி கொடுத்து வரவோ?

கூட்டில் குடியிருக்கும் கொஞ்சும் கிளியுடனே
    கொல்லும் பருந்தும் உறவோ?—தமிழ்
நாட்டில் பிறந்தவனே! நத்திப் பிழைத்த இனம்
    நம்மை உறவு கொளவோ?

மானம் உடையகுலம் தானம் கொடுத்தகுலம்
    மாண்பு நிறைந்த குலமாம்—தமிழ்க்
கானம் இசைத்தகுலம் கன்னித் தமிழ்க்குலமும்
    கண்கள் கலங்கி அழவோ?

பூவும் எழிலுடனே பூத்துக் குலுங்குகின்ற
    பூங்கா குரங்கு வசமோ?—புகழ்
மேவும் குணம்நிறைந்த மேன்மைத் தமிழினத்தின்
    மீட்சி 'பகைவர்' வசமோ?

வீரம் மிகுந்தஇனம் வேங்கை நிகர்த்தஇனம்
    வெற்றித் தமிழன் இனமாம்—அட
சோரம் மிகுந்தஇனம் சோம்பித் திரியும்இனம்
    சொத்தைப் பகைவர் இனமாம்!

தங்கத் தமிழகத்தில் அங்கம் வகிப்பவனே
    பொங்கி எழுந்து வருவாய்!—தமிழ்ச்
சங்கத் தலைமகனே! மங்காப் புகழுடைய
    சிங்க முழக்கம் இடுவாய்!

ஆண்ட மறக்குலத்தின் ஆண்மைத் தமிழ்மகனே
    அஞ்சா(து) எழுந்து வருவாய்—நம்மை
மாண்ட இனத்தவராய் மாய்க்க நினைப்பவரின்
    மார்பைப் பிளக்க வருவாய்!

நாட்டின் புகழினையே நாடும் பரம்பரையை
    நாளும் அழித்து விடவே—பகை
நாட்டான் முயலுகிறன் நம்மை மிரட்டும்அந்த
    நாயை ஒடுக்க வருவாய்!

கோட்டான் குயிலுடனே கூடி மகிழ்ந்திருந்து
    கொஞ்சும் நிலையும் உளதோ?—பகை
நாட்டின் முயற்சிகளை நாமும் முறியடித்து
    நாளும் புகழை வளர்ப்போம்!

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 24—11—68 இதழ் 18

கருணை காட்டவேண்டும்!

மத்திய அரசு, தன் ஊழியர்கள்பால் காட்டுகிற பிடிவாதப் போக்குகண்டு நல்லவர்கள்—நடுநிலையாளர்கள் அனைவருமே கவலைகொள்ளத்தான் செய்வர்.

ஒரு அடையாள வேலை நிறுத்தம் நடைபெறக்கூடாது என்பதற்காக—சட்ட முறைப்படி ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிலபல உரிமைகளைப் பறித்து, அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டதும், அதன் விதிமுறைகளின்படி இப்போது பழிவாங்கத் துடிப்பதும், நல்ல மனம் படைத்த—ஜனநாயகக் கோட்பாடு என்பதன் பேரால் ஆட்சியிலிருக்கின்ற ஒரு ஆட்சிக்கு உகந்ததாகத் தெரியவில்லை.

ஒரு சட்டம் மதிக்கப்படவேண்டும் என்பதிலும், அதன் விதிமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதிலும் நமக்கு ஆட்சேபணை எதுவுமில்லை. சட்டங்கள் இயற்றப்படுவதே, மக்களது வாழ்வுக்கு வழிதேடவும், பாதுகாப்புத்தரவும், நிருவாக வசதிகளைச் சீர்படுத்திக் கொள்வதற்காகவும்தான்! ஆனால் அவ்வாறு வகுக்கப்படுகின்ற சட்டங்கள் தன் முதுகெலும்பையே ஒடித்துவிடத்தக்கதாக மாறிவிடும்போது, இலட்சியங்களும் மாறிவிடத்தான் செய்யும்.

நாட்டின் பொதுச்சூழ்நிலையில் இப்போது எப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களும் விரும்பத்தக்கதல்ல என்றாலும், அவ்விருப்பங்களையும் மீறி அது நடைபெற்றுவிட்டபோது, சட்டத்தைக் காரணம் காட்டி பழிவாங்குவதென்பதுமட்டுமே பரிகாரமாகிவிடாது.

பழிவாங்குவதை அனுமதித்து சட்டமும், விதிமுறைகளும் இடந்தந்தாலும்கூட, அதைச் செயல்படுத்துவதில் கொஞ்சம் மனிதாபிமான உணர்ச்சியும் இருக்கவேண்டும்.

நடைபெற்று முடிந்த வேலை நிறுத்தத்தைப் பொறுத்த மட்டில் அரசுக்கும் சரி—அதன் ஊழியர்களுக்கும் சரி, ஒரு முதல் அனுபவமாகும். சட்ட முறைப்படி தடுத்தது அரசுக்கும்—அதனை மீறியது அதன் ஊழியர்களுக்கும் அனுபவங்களாகும்!

விரும்பத்தகாத ஒன்று நடைபெற்றால், அதன் எதிரொலி எப்படி இருக்கும் என்பதை இப்போது அரசும், ஊழியர்களுமே நன்கு புரிந்துகொள்ளும் ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில், மத்திய அரசின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதில் சொல்ல எழுந்த பிரதமர், எதுவுமே பேசமுடியாத அளவுக்கு நாடாளுமன்றமே கூச்சல்களாலும், குழப்பங்களாலும் சூழப்பட்டிருந்ததுகூட, இதன் எதிரொலியின் ஒரு பகுதியேயாகும். இந்தமுறை நாகரிகத்துக்கு உகந்ததல்ல—ஜனநாயகக்கோட்பாட்டுக்கு ஏற்றதல்லதான் என்றாலும், இந்த நிலையை உண்டாக்கியவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள்தான் என்றாலும், இவைகளையே காரணம் காட்டிப் பழிவாங்கத்துடிப்பதும், தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதும் வருந்தத்தக்கதாகவே இருக்கிறது.

ஒருசிலர்மீது வழக்குகள் தொடுத்தும், ஒருசிலரை வேலையிலிருந்தே நீக்கம் செய்தும் விடுவது மட்டுமே அரசுக்கு மனமகிழத்தக்க ஒரு செயலாகிவிட முடியாது, பிரச்னையும் இதன் மூலம் தீர்ந்துவிட்டதாகிவிடாது.

அரசின் பிடிவாதம் காரணமாக, பழி வாங்கப்படுவோர் அதன் ஊழியர்கள்தான் என்றாலும், அந்த தண்டனைகளை ஏற்கவேண்டிய அளவுக்கு, ஊழியர்கள் மட்டுமே காரணகர்த்தர்களாக இருக்கவில்லை என்பதனையும், ஊழியர்கள் ஒருசில அரசியல் கட்சிகளின் தூண்டுதலுக்குப் பலியாகி இருக்கிறார்கள் என்பதனையும் மத்திய அரசு அறிந்தே வைத்திருக்கிறது.

எனவே, அனுபவங்களைப் படிப்பினையாகக் கொள்ளமட்டுமே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமே ஒழிய, பழிவாங்கப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நினைக்கவும் கூடாது — செயல்படவும் கூடாது என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

அதே நேரத்தில், அரசு ஊழியர்களிடம் தங்களுக்கிருக்கும் அனுதாபத்தை — செல்வாக்கை மிகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக இதுபோன்ற போக்குகளை அரசியல் கட்சிகள் வளர்த்து விடுவது பற்றியும் ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும் என்பதையும் சொல்ல வேண்டியது நம் கடமையாகும்.

★

ஒரு முடிவு — விரைவாக வேண்டும்!

அண்மையில் கோவாவில் அ. இ. கா. க. கூடி மதுவிலக்குபற்றிக் காரசாரமாக விவாதம் நடத்தி — ஏழாண்டுகளில் படிப்படியாக முற்றிலும் அமுல்படுத்துவது என்று தீர்மானித்துக்கொண்ட செய்தி, இன்னமும் மக்கள் மனதைவிட்டு அகன்றிருக்க முடியாது.

இது தொடர்பான விவகாரத்தை ஏழாண்டுக் காலத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டது என்று மட்டுமே பொருள்கொள்ள முடிந்த தீர்மானம் இது. ஆனால் ஏழு ஆண்டுகளுக்குள் முழுமையாகச் செயல்படுத்திவிடவும், 1969 அக்டோபர் 2-ம் நாள் இது தொடர்பான அலுவல்களுக்கு அங்குரார்ப்பணம் செய்வதும் என்பது தீர்மான வாசகமாகவிருக்கிறது.

இப்படி வாசகமாக இருக்கின்றவரையில், புதியதாக எந்த மாநிலமும், மதுவிலக்கைத் தளர்த்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருக்க வேண்டும் என்பதுதான் வரவேற்கத்தக்கதாக விருக்கமுடியும்.

மாறாக, பம்பாய் மாநிலம், ஒரு இலட்சிய முறிவு போல, மதுவிலக்கைத் தளர்த்தி புதிதாக அடுத்த டிசம்பர் 1-ம் நாள் முதல் 2400 கள்ளுக்கடைகளைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பை இப்போது தந்துவிட்டிருக்கிறது.

ஒரு மாநிலத்தவருக்கு மது வருந்தும் உரிமை

இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

நீங்களும் தயாரா?

பாரதி ஒரு மகாகவியா? வரகவியா? கவித்திறன் அவருக்கு உண்டா இல்லையா? என்பவற்றில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே" என்ற அவரது பாடல் அடிகளில் எந்த முரண்பாடும் கொள்ளவில்லை. அதுபோலவே, "பெண்ணுக்கே உரிமை இல்லையென்று வாது பேசிடும் நாவைத் துணித்திடுவோம்" என்று கவி கம்பதாசனின் உரிமை முழக்கத்திலும் பொருள் மயக்கம் கொள்ளவில்லை. இவைகளின் மூலமாக வெல்லாம் பெண்களின் சமூகத்திற்கில்லாத ஏதோ சில உரிமைகள் ஆண்களது வர்க்கத்துககுக் கிடைத்திருப்பதாகவும், மறுக்கப்பட்டிருக்கின்ற அந்த உரிமைகள், அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதாகவும் கருதி குரல் கொடுத்திருக்கிறார்கள்! உண்மைதானே என்று நாமும் அவர்களது கருத்துக்களுக்கு உடன்பட்டு விடுகிறோம்! ஆனால், ஒரு ஆண் மகன், பெண் ஒருத்தியிடம், தனக்கும் அவள் போலவே உரிமைகள் வேண்டும்; சமஉரிமை வேண்டும் என்று கூறினால் அப்போது அதுதான் செய்தியாகி விடுகிறது. இப்படி ஒரு வழக்கும் பதிவாகி இருக்கிறதென்றால், அது சுவையான செய்தியாகி விடுகிறது. ஒரு கணவன், தன் மனைவிக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் தனக்கும் அளிக்கப்பட வேண்டும்; மனைவியைப் போன்றே தனக்கும் சமஉரிமைகள் வேண்டும் என்று மனைவியின்மீது ஒரு "ரிட்" போட்டுள்ளதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது ஏடுகளில். அதுவும் தமிழக ஏடுகளில்! தமிழகத்தின் நடுமையமாகவிருக்கும் பொன்னிக் கரை நகராம் திருச்சியில்! எப்படி வழக்கு? உங்களில் எத்தனைப் பேர் தயாராகிக்கொள்ள நினைக்கிறீர்கள்!

அப்படி ஒரு அயூப் வேண்டுமே!

ராணுவ பலத்தின் மூலம் பதவிக்கு வந்த பாகிஸ்தான் அதிபருக்கு இப்போது அந்த இராணுவம் கூட கைகொடுக்காத நிலை வளர்ந்து கொண்டு வருவது அரசியலில் ஒரு புதுத்திருப்பமாகத்தான் கருதப்பட வேண்டும். பாகிஸ்தானுக்குள் தனக்கு ஒரே எதிரி என்று அயூப் கருதிய பூட்டோவையும், தன் இரும்புப் பிடிக்குள் போட்டுக்கொண்ட பிறகும், பாவம் அயூபினால் அமைதியாக விருக்க முடியவில்லை. நாடெங்கும் பலாத்கார கிளர்ச்சி வலுவடைந்து கொண்டுவரும் ஒரு நிலைமை, அதிபரைப் பற்றிய மக்களது மதிப்பீடு என்ன என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானது. பொது மக்கள் மட்டுமல்ல—அதிகாரிகளேகூட இந்த எதிர்ப் புணர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்களாம் இப்போது! விமானப் படை தளபதியேகூட அயூபுக்கு எதிராக நாடெங்கும் ஒரு பயணமே நடத்தப் போகிறாராம்! வழக்கறிஞர்களின் குரலும் ஒட்டு மொத்தமாக உரத்து ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. மாணவர்கள்கூட, இவற்றில் தங்களுக்குத் தொடர்பில்லாத நிலையிலும் பூட்டோ ஆதரவாளர்கள் என்பதை எந்தெந்த வழியிலோ நிரூபித்துக்கொண்டு வருகிறார்களாம்! சென்ற தேர்தலின்போது, அதிபர் அயூபை எதிர்த்துப் போட்டியிட்ட பாத்திமா ஜின்னாவென்று அழைக்கப்படும் முகமதலி ஜின்னாவின் சகோதரியார் பற்றிய செய்திகளையே காணோம்! அவர் எந்தப் பக்கம் என்பதும் புரியவில்லை. தேர்தல் நடைபெறுவதற்குள்ளாக பாகிஸ்தானில் என்னென்ன நடக்கும் என்று அனுமானித்துப் பார்ப்பதேகூடப் பயங்கரம்தான்! இவற்றிற்கெல்லாம் முழுமுதல் காரணம், அனைத்துத் தரப்பும் பூட்டோவை ஆதரிக்கிறது என்பதைவிட, அயூபின் கொள்கைகளை வெறுக்கின்றன என்றேதான் கொள்ள வேண்டும்! நிலைமைகளை உணர்ந்து தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளும் ஒரு அயூப்கானை நம்மால் காண முடியுமோ என்னவோ!

சாக்கடையிலா மணம் கிடைக்கும்?

"பொய்யின் உற்பத்திச்சாலை" என்று கருதப்படும் ஒரு காங்கிரஸ் நாளேட்டில், சென்னையில் பாரதியார் சிலை உடைந்து நொருங்கியது தொடர்பாக பிற எல்லா ஏடுகளும் நகரில் பெய்த பெருமழை காரணமாக சரிந்திருக்கலாம் என்று காரணம் காட்டி இருக்கின்றன. காங்கிரஸ் ஏட்டின் விஷமத்தனத்தைப் பார்க்கும்போது, இன்னும் அந்தப் புத்திப்போகவில்லை என்றே தெரிகிறது. அறைக்க அறைக்க சந்தனம் வேண்டுமானால் மணக்குமே ஒழிய, சுடச் சுட சங்கு வேண்டுமானால் வெளுக்குமே ஒழிய, சாக்கடைக் கழிவு மணக்குமென்று நம்புவதும், சுண்ணாம்புக்கல் வெளுக்குமென நினைப்பதும் தவறுதானே! கழக ஆட்சியைக் குறை சொல்ல நினைக்கும் நினைப்புக்கு இதுகூட "தீனி" யென்றால் அந்த "நினைப்பை"ப் பற்றிய ஐயம் அல்லவா மக்களுக்கு ஏற்பட்டுவிடும்! அப்புறம் "மீண்டு" வரமுடியுமா? காலகாலத்துக்கும்! எதிர்க் கட்சி என்றால் "நடுநிலைக் கண்ணோட்டம்" இருக்கக் கூடாது என்பதுதான் பொருளோ என்னவோ!

—ராஜிமணாளன் தொகுத்தவை.

கிடைக்கிறபோது, இன்னொரு மாநிலத்தவருக்கு அந்த உரிமை மறுக்கப்படுவது என்பதோ, அல்லது ஒருவர் மறுக்கப்படும்போது இன்னொருவருக்கு வழங்கப்படுவது என்பதோ அடிப்படை உரிமைகள் பற்றிய விஷயமாகி விடக்கூடும். இதுபோன்ற நிலைமைகள்கூட மதுவிலக்கை, ஒரு மாநிலம் முழுமையாகச் செயல்படுத்த முடியாத நிலைமையை உண்டாக்கவும் கூடும்.

காந்தியடிகளின் பேரால் வாழ்ந்துகொண்டிருக்கும் காங்கிரசும், மத்திய அரசும் இதுபற்றி உடனடியான முடிவுக்கு வந்தாக வேண்டும். மதுவிலக்கு மாநில விவகாரமானாலும், மாநிலத்துக்கு மாநிலம் இருக்கும் வேறுபாட்டைக் களைய உரிமை பேசிக்கொண்டிருப்பது மத்திய அரசேயாகையால், அது இது விஷயத்தில் அலட்சியம் காட்டுவது நல்லதல்ல!

பம்பாய் மாநிலமும், இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 3½ கோடி வருவாய்பெற விருப்பதும் ஒதுக்கித் தள்ளி விடக் கூடியதல்ல! அனைத்துக்கும் பொருத்தமான ஒரு வழியை — விரைவாகக் காண்பது ஒன்றுதான் காந்தியடிகள் சாந்தியடையக் கூடியதாக இருக்க முடியும்.

ஆரவாரம்

குடுப்பதி ரகுநாதன்.

நெல்லையிலேயே இருந்து பழகிப் [illegible] எனக்குத் திருச்சி சூழ்நிலை [illegible] ரொம்பப் பிடித்துப் [illegible]து! மனதுக்கு ஒரு மாறுதல் வேண்டுமென்று நீண்ட நாட்களாக [illegible] நினைத்திருந்தேன்!

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இந்த சமயத்தில்தான் அந்தசந்தர்ப்பம் கிடைத்தது. நானும் எனது மனைவி சுமதியும் மட்டுமே புறப்படுவதாகத் திட்டம்! எத்தனையோ காலமாய்விட்டது—நாங்கள் மட்டும் தனியாக ஒரு இடத்திற்குப் புறப்பட்டு!

ஆனல் அதிலொரு சின்ன மாறுதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. கடைக் குட்டி வசந்திக்கு எப்பொழுதுமே எங்கள் வீட்டில் ரொம்ப செல்லம். அவள் ஸ்ரீரங்கம், திருவானைக்கா முதலிய தலங்களைப் பார்க்க ஆசைப்பட்டாள்! அதனல் அவளையும் கூட்டிச் செல்ல நேரிட்டது.

வசந்தியை இந்த ஆண்டுதான் பி.ஏ.வில் சேர்ந்திருந்தோம். நாங்கள் திருச்சிக்குப் புறப்பட்ட சமயத்தில், அவள் விடுமுறையில் வீட்டிலிருந்தாள். ஆனல் அடுத்த வாரத்தில் கல்லூரி திறந்துவிடுவார்கள். நாங்களோ இருபது நாட்களுக்கு சென்னை திரும்புவதாக எண்ணமில்லை.

அதனல் அவளை சென்னையிலேயே விட்டுவிட்டு வரலாமென்று நான் சொன்னேன். வசந்தி கேட்கவில்லை. திருச்சியில் அவளுடைய கல்லூரித் தோழி ஒருத்தியிருக்கிருளாம்! அவளோடு சென்னைக்கு வந்து விடுவதாகச் சொல்லி, எங்களோடு ஒட்டிக்கொண்டாள்.

சின்னஞ்சிறிசின் ஆசையை கெடுப்பானேன் என்று அவளையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டோம்.

திருச்சியில் என்னுடைய நண்பர் ராசரத்தினத்தின் வீட்டில் தங்கியிருந்தோம். அவர் இளமையில் என்னேடு அலுவலகத்தில் பணி புரிந்தவர். தற்பொழுது திருச்சியிலேயே குறிப்பிடத்தக்க வர்த்தக நிபுணர்!

காவேரியின் அழகிலே மனதைப் பறிகொடுத்துவிட்டதாலோ என்னவோ ஒருவாரம் போனதே தெரியவில்லை!

இன்னும் இரண்டு நாட்களில் வசந்திக்குக் கல்லூரி திறக்கிருர்கள். அவளை சென்னைக்கு அனுப்பியாக வேண்டும்!

தன் தோழி லதாவிடம் முன்பே சொல்லி வைத்திருந்தாள் வசந்தி—அவளோடு சென்னைக்குத் தானும் வருவதாக. இவர்கள் போய் வீட்டில் கேட்டதற்கு, இரண்டு நாட்களுக்கு முன்பு ஈரோட்டிலிருந்த லதாவின் அக்கா தங்கையை கூட்டிக்கொண்டு போய்விட்டதாகவும், லீவு முடிந்தவுடன் அவள் ஈரோட்டிலிருந்தே சென்னைக்குப்போய் விட்டதாகவும், வசந்தியை வேறு துணை பிடித்து வரும்படியும் வீட்டில் சொல்லிவிட்டுப் போயிருந்தாளாம்!

இனி வசந்தியை சென்னைக்கு அனுப்புவது எப்படி என்பது ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது எங்களுக்கு!

அந்த சமயத்தில்தான் சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்தான் குமார்.

குமார் நண்பர் ராஜரத்தினத்திற்கு ஒரு வகையில் உறவு. என் பிள்ளை கௌரி சங்கருக்குகூட நல்ல பழக்கம். இரண்டொரு முறை எங்கள் வீட்டிற்குக்கூட வந்திருக்கிருன்.

அவனும் சென்னையில்தான் படிக்கிருன். லீவு முடிந்து, மறுநாள் சென்னைக்குப் புறப்பட இருந்தவன், ராஜரத்தினத்திடம் சொல்லிவிட்டுப் போக வந்திருந்தான்!

"குமார், நாளை காலையில் நீ சென்னைக்குப் புறப்படும் பொழுது இங்கு வந்துவிட்டுப் போ. வசந்திக்கும் கல்லூரி திறக்கிருர்களாம்! சென்னைக்குப் போக அவளுக்குத் துணையில்லை. நீ கூட்டிக்கொண்டுபோய் நம் வீட்டில்விட்டுவிட்டு அப்புறம் ஹாஸ்டலுக்குப்போய்விடு" என்று சொன்னேன்.

'சரி மாமா" என்று சொல்லிவிட்டு, அவன் விடைபெற்றுக் கொண்டான்.

சுமதிக்கு அது கொஞ்சம்கூட பிடிக்கவில்லையென்பது அவள் முகத்தைப் பார்த்தவுடனேயே எனக்குத் தெரிந்துவிட்டது! ராஜரத்தினமும் அங்கிருந்ததால், அவளால் எதையும் சொல்ல முடியவில்லை.

என்னைத் தனிமையில் பார்த்தவுடனேயே கோபமாகக் கேட்டாள்.

"ஏன்தான் உங்களுக்குப் புத்தி இப்படிப்போகிறதோ? வயசு வந்த பெண்ணை தனியாகவா வேருெரு ஆடவனேடு அனுப்புவது?"

'என்ன சுமதி, நீகூடவா இவ்வளவு கட்டுப் பெட்டியாக இருக்கிருய்? இந்தக் காலத்திலே இதையெல்லாம் பார்த்தால் ஒன்றுமே நடக்காது! ஒப்புக்குதானே துணை? நம்ம வசந்திக்கு என்ன தெரியாமலிருக்கிறது? இல்லே இந்த குமார்தான் முன்பின் தெரியாதவனு? சும்மா மனசை அலட்டிக்கொள்ளாமலிரு"

"நான் அதற்குச் சொல்லலே. அதென்னவோ இந்தக் காலத்துக் காலேஜு பசங்களின் போக்கே எனக்குப் பிடிக்கலே! அதோடு இந்தக் குமார்கூட ஒரு மாதிரின்னு நினைக்கிறேன்!"

அவள் எதை நினைத்துக்கொண்டு இப்படிச் சொல்கிருளென்று எனக்குப் புரிந்துவிட்டது! நான் அதை தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை!

ஒருமுறை நானும் அவளும் பொருட்காட்சிக்குப் போயிருந்தோம் அங்கு எங்கள் முன்னிலையில் ஒரு சம்பவம் நடந்தது.

கல்லூரி மாணவர்கள் சிலர் இளம் பெண்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். நாங்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்தே கவனித்துக்கொண்டுதானிருந்தோம்!

அந்த மாணவர் கோஷ்டியில் இந்த குமார்கூட இருந்ததாக நினைவு!

திடீரென அவர்கள் கூட்டத்தில் ஒரு இளம் பெண்ணைச் சூழ்ந்துகொண்டு......அவர்கள் செய்த கலாட்டா...அப்பப்பா!...

அதை நினைத்துக்கொண்டுதான்

அவள் வசந்தியை குமாரோடு அனுப்ப மறுத்தாள். என்னயிருந்தாலும் பெற்றவள் இல்லையா?

எப்படியோ அவளை சமாதானம் செய்து, வசந்தியை குமாரோடு மறுநாள் காலையில் சென்னைக்கு அனுப்பி வைத்துவிட்டேன்!

இரண்டாவது நாளே வசந்தி வந்து சேர்ந்த விபரத்திற்கு என் மூத்த பிள்ளை கடிதம் எழுதியிருந்தான். அதைப் பார்த்தவுடன்தான் சுமதிக்கு மனம் ஆறுதலடைந்தது.

மேலும் பத்து நாட்கள் திருச்சியில் நிம்மதியாகக் கழித்துவிட்டுத்தான், சென்னை திரும்பினோம்.

அந்தப் பயணம் எங்கள் மனதிற்கு மாறுதலாகவும், இதமாகவும் இருந்தது.

மாலை நேரம். கல்லூரியிலிருந்து வசந்தி அப்பொழுதுதான் வீடு திரும்பியிருந்தாள்.

சுமதி அவளைத் துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தாள். நானும் சிரித்துக் கொண்டே அதைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

"அம்மா, அந்த குமார் சுத்த சங்கோஷியான பேர்வழி! எதற்கெடுத்தாலும் நானே பேச வேண்டியிருந்தது! ரொம்ப வெட்கப்பட்டுக் கொள்கிருர்! கேட்ட கேள்விக்கு உண்டு, இல்லை என்று இரண்டே வார்த்தைகளில் பதில் சொல்லி விடுகிருர்! என் முகத்தைப் பார்க்கவே பயமாக இருக்கும் போலிருக்கிறது! நான் ஏதாவது கேட்டால் வெளியில் பார்த்துக்கொண்டே பதில் சொல்வார்! நான் கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொள்வேன்!

முதலில் அந்தக் குமார் ஒரு பயந்தாங் கொள்ளியென்றுதான் நினைத்திருந்தேன்! ஆனால்......அடேயப்பா!... "என்னடி?" என்று ஆர்வத்தோடுகுறுக்கிட்டாள் சுமதி.

"ஒரு ஸ்டேஷனில் எங்கள் பெட்டியில் ஒரு தடித்த முரட்டுப் பேர்வழி ஏறினன். அவன் எங்களுக்கு எதிர்ப்புறம் உட்கார்ந்து கொண்டான். குமார் என் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தார். ஆனால் என் மேல் பட்டு விடாமல் இடைவெளி விட்டு அமர்ந்திருந்தார்.

அந்த முரடன் எனக்கு எதிராக உட்கார்ந்து கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். சே! சே! அந்தப்பார்வை ரொம்ப அசிங்கமாக இருந்தது. நான் குனிந்து உட்கார்ந்து கொண்டேன்.

குமார் இதையெல்லாம் கவனித்துக் கொண்டு தானிருந்திருப்பார் போலிருக்கிறது! ஒரு ஸ்டேஷனில் வண்டி குலுங்கிக்கொண்டே நின்றது.

அந்தக் குலுக்கலைக் காரணமாக வைத்துக்கொண்டு வேண்டுமென்றே அந்த முரடன் என்மேல் சாய்ந்து விட்டான்!

குமாருக்கு எங்கிருந்துதான் அந்தப் பலம் வந்ததோ! அவனைத் தூக்கி நிறுத்தி படீர் படீரென்று நாலு அறை விட்டார்! நான் பயந்தே போய் விட்டேன்!

வண்டியிலிருந்த மற்றவர்கள் குமாரைச் சமாதானப் படுத்தினர்கள்.

"காலிப் பயல்! என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிருன்? கேட்பதற்கு ஆளில்லையென்று நினைத்துக் கொண்டானு? சே! சே! வர வர பெண்கள் ஒரு பக்கம் நிம்மதியாகப் போய் விட்டு வரமுடியவில்லை!" என்று சென்னை வரும் வரை உறுமிக்கொண்டே வந்தார்.

பாவம் அந்த ஆள் பேசாமல் ஒரு ஸ்டேஷனில் இறங்கிக்கொண்டான்! என்று வசந்தி சிரித்துக்கொண்டே அவள் ரயில் பிரயாணத்தைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்!

சுமதிக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போலிருந்தது! அவளுக்கு ஒரே வியப்பு. அவள் ஏதோ நினைத்திருந்தாள். ஆனால் நடந்தது வேறு மாதிரி!

"என்னங்க! வசந்திசொன்னதைக் கேட்டுக்கொண்டு தானே இருந்தீர்

வாய்வு சூரணம்
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
150 கிராம் டின் ரூ. 4—00

பூபதி எண்ணெ
இருமல், இளைப்பு, எங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் டனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம் செய்யவல்லது,
புட்டி ரூ. 7—50

கக்குவான் மருந்து
முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவல்லது.
புட்டி ரூ. 2—00

வீரகேசரி மாத்திரை
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சத்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

S. V. R. சன்ஸ் R. I M P (கண்டர் வைத்தியசாலை)
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

கிடைக்குமிடம்:
அமிர்தலால் அண் கோ., 146 தைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ. செல்ராம நாடார் அண் சன்ஸ், 188-ஏ தாராவி ரோடு, பம்பாய்-17,
சொக்கலிங்கம் செட்டியார், மருந்துக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி.
ஆதமஜோதி நிலயம், நாவலப்பிட்டி, சிலோன்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

—ஜே. வி. நாதன்.

ஜெர்மனியில் உள்ள அல்ம் என்னும் இடத்தில் 1879-ஆம் ஆண்டில் ஆல்பர்ட் ஐன்ஸ்டின் பிறந்தார். சிறுவயதில் திக்கித் திக்கிப் பேசும் அவரை, உளறுவாயன் என்று பலரும் கேலி செய்தார்கள். ஆனால் அவர்தான் பிற்காலத்தில், ஆகாயத்திற்கும், காலத்திற்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை எடுத்துரைத்த பேரறிவாளியாக மாறினார். சிறுவயதில் கணிதத்தில் மிகுந்த ஆர்வம், கணிதத்தின் உற்ற துணையான பௌதீகத்திலும் ஆர்வம்! பள்ளிப் படிப்பில் விருப்பின்றி இத்தாலியில் உள்ள மிலானுக்குச் சென்றார். ஒரு தெரிந்தவரது பரிந்துரையின் பேரில் 'உரிமை ஆய்வு இலாகா' என்னும் அலுவலகத்திலிருந்து பேட்டிக்கு அழைத்திருந்தார்கள். பேட்டியில் "இந்த அலுவலகம் பற்றி நீ என்ன அறிவாய்?" என்று கேட்டார்கள். "ஒன்றும் தெரியாது" என்று அவர் பதில் அளித்தார். ஆனால் அந்த வேலை அவருக்கே அளிக்கப்பட்டது. வேலையிலிருந்து கொண்டே ஓய்வு நேரங்களில் ஆல்பர்ட் ஆராய்ச்சி செய்து கொண்டேயிருப்பார்; இடைவிடாமல் பௌதீக நிகழ்ச்சிகளைப் பரிசோதித்து வந்தார். 1905-ல் பல ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டார். அவை பல அறிஞரின் மனதைக் கவர்ந்தன. 'ஸூரிச் சர்வகலாசாலை' அவருக்கு பி.எச்.டி பட்டம் அளித்துக் கௌரவித்தது. அவர் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவியது. 1909-ல் அவர் படித்த 'ஸூரிச் தொழிற் கல்விக் கழகம்' பேராசிரியர் பதவியளித்தது. பிற நாடுகளில் அவருடைய புகழைக் கேட்டு விழித்துக் கொண்ட ஜெர்மனி, தன் மண்ணில் உதித்த ஆல்பர்ட் ஐன்ஸ்டினை பெர்லின் சர்வகலாசாலையில் பேராசிரியர் பதவி ஏற்குமாறு வற்புறுத்தியது. இரண்டு ஆண்டுகள் அங்கு பதவியிலிருந்தார் ஐன்ஸ்டின்.

கணித சாத்திரத்தில் தனித் துறையை ஏற்படுத்தியவர் ஐன்ஸ்டின். யாவரும் மூன்றுதான் உண்டு என்று கூறியபோது "இல்லை. நான்காவது ஒன்றும், (The Fourth Dimension) உண்டு" என்று கூறியவர். 'கால ஆகாய சமுச்சய நியாயத்தை' எடுத்து முதன்முதலாக நிலைநிறுத்திப் பெருமை பெற்றவர் இவரே. 'வியாபகப் பொருள்' ஒளியானது ஒரு நொடிக்கு 186000 மைல் வேகத்தில் பரவ உதவுகிறது. வியாபகப் பொருள் இன்றி எதுவும் இல்லை என்று அறிஞர்கள் எண்ணிக் கொண்டிருந்தபோது "வியாபகப் பொருள் என்ற ஒன்று இல்லவே இல்லை" என்று அடித்துக் கூறினார். "நிலைத்த ஒன்று வேண்டுமானால், காலத்தையும் இடத்தையும் இணையுங்கள். இல்லாத வியாபகப் பொருளைப் பற்றிக் கவி பாடாதீர்கள்" என்றார் அவர். 'பிரகிருதியும், பூதசக்தியும் ஒன்று' என்பதும், 'ஒளிக்கும் மின்சாரத்திற்கும் உள்ள தொடர்புகள் என்பதும் அவரால் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய உண்மைகள். பாரிஸ் பல்கலைக் கழகம் இவரை அழைத்து 'பி. எச். டி.' பட்டம் வழங்கிற்று. ஐன்ஸ்டினுக்கு 1921-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. சுமார் 8000 பவுன் மதிப்புள்ள அப்பரிசுத் தொகை முழுவதையும் கல்வியின் வளர்ச்சிக்கு வழங்கி விட்டார் ஐன்ஸ்டின். பரந்த மனம், சாந்த குணம் எளிமை வாழ்வு—இவையெல்லாம் அவரிடம் மக்கள் கண்ட பண்புகள். இந்தியாவில் ஐன்ஸ்டின் பயணம் செய்தபோது அவர் ரிக்ஷாவில் ஏற மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது!

பால் போர் பிரபு என்ற இங்கிலாந்தின் முதன் மந்திரி இவரை நியூட்டன், கலிலியோ முதலியோரைக் காட்டிலும் சிறந்த அறிஞர் என்று புகழ்ந்தபோது மிகவும் தன்னடக்கத்தோடு அவர் அவ்வுரையை மறுத்தார். அவருடைய அடக்க குணம் இதிலிருந்து நன்கு தெரிகின்றது.

இந்தியாவைப் பற்றி அவர் கூறியது: "இந்நாட்டைப் பார்க்கும்போது மேனாடுகள் எக்கதிக்குள்ளானல்தான் என்ன? என்ற எண்ணம் தோன்றுகிறது. இந்நாட்டு மக்கள் கள்ளங்கபடம் அற்றவர்கள். மேல் நாடுகளில் காணப்படும் கல் நெஞ்சமும் சுயநலமும் இங்கில்லை. இதனலேதான் இந்நாடு செல்வத்திலும் நாகரீக வாழ்விலும் பின்னடைந்திருக்கிறதோ என்னவோ, தெரியவில்லை!"

தெளிந்த அறிவும் அடக்கமான குணமும், அறிவியல் நுட்பமும் எளிமையான வாழ்க்கையும் மேற்கொண்டு பாரோர் போற்ற வாழ்ந்து பல நுட்பங்களைக் கண்டு பெரும்புகழ் பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டின் தனது 76-ஆம் வயதில் காலமானர்.

கள்? எனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கிறது! அன்று பொருட்காட்சியிலே பார்த்த கும்பலிலே இந்தக் குமாரும் இருந்தானே? நீங்கள் அதற்குள்ளாகவா மறந்து விட்டீர்கள்? வசந்தி சொல்வதைப் பார்த்தால் இந்தக் குமார் ரொம்ப நல்ல பிள்ளையாக இருப்பான் போலிருக்கிறதே!"

"சுமதி இதெல்லாம் இப்படித்தான் நடக்குமென்று எனக்கு முன்பே தெரியும்! பொருட்காட்சியில் நீ கண்ட காட்சியால், கல்லூரி மாணவர்கள் மேலிருக்கும் உனது வெறுப்பைப் போக்கவே வசந்தியை குமாரோடு அனுப்பினேன்!

சுமதி, பூவன் பழம் இருக்கிறதே அதை நீ கவனித்திருக்கிருயா? அதனுடைய மெல்லிய தோல் வெயிலில் வாடி கறுத்திருக்கும்! அதை உரித்துப் பார்த்தால், பழம் ரொம்ப நன்ருக இருக்கும்! சாப்பிடுவதற்குச் சுவையாக, கொஞ்சம் கூட கெடாமலிருக்கும்! ஆனல் பார்ப்பதற்கு கறுத்து நன்ருக இருக்காது!

அதுபோல்தான் நம் கல்லூரி மாணவர்களின் 'தாம், தூம்' நடவடிக்கைகளும்! உன் மனசில் கொஞ்சம் கூட விகல்பம் இராது! வெறும் குறும்புதான் அது! பொறுப்புகளை நாம் அவர்களிடம் ஒப்படைக்கும் பொழுது அதெல்லாம் தானகப் போய்விடும்!

தற்கால அரசியல், சினிமா, புத்தகங்கள் இவைகளின் வெற்றுக் கவர்ச்சியால், ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் எல்லையை மறந்து விடுகிருர்கள்! அதன் விளைவு பண்பாடு, அரசியல் அணைத்திலும் பொது மக்களின் நல்ல அபிப்பிராயத்தை இழக்க நேரிடுகிறது! உண்மையில் அவர்களுடைய உள்ளம் கெட்டுவிடவில்லை! வெறும் 'ஆரவாரம்' அவர்களை கெட்டவர்களாகக் காண்பிக்கிறது!" என்று விளக்கினேன்.

"இதை 'நம் குழந்தைகள்' உணர்ந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!" என்று சொன்னுள்.

"ஆம், அவர்களும் 'நம் குழந்தைகள்' தான்! என்று என்னையறியாமல் முணு முணுத்தேன்! ●●

எனது பயணம்

அரங்கண்ணல்

சிங்கப்பூர், மலேசியக் குடியரசைச் சார்ந்த கோலாலம்பூர். ஈப்போ, தைப்பிங், பினாங்கு, தெலுக்கான்சன் போன்ற ஊர்கள் வெளிநாட்டுக்கு வந்திருக்கிறோம் என்கிற உணர்வை எனக்கு உண்டுபண்ணவில்லை. ஆங்காங்கும் சீனர்களையும், மலாய்க்காரர்களையும், அவர்கள் குடியிருக்கும் மரத்தாலான வீடுகளையும் நான் கண்டாலும்கூட, எனக்கு மயிலாப்பூரிலிருப்பது போன்ற சூழ்நிலையே ஏற்பட்டது. கழகக் கொள்கை மீது ஆர்வங்கொண்ட தோழர்கள் மட்டுமின்றி, என்னோடு படித்த நண்பர்களில் சிலர், எழுத்துத்துறையில் எனக்குச் சகோதரர்களாக இங்கேயிருந்து இப்போது அங்கேபோய் டெலிவிஷன் — வானொலி — பத்திரிகைகளில் தொடர்பு கொண்டிருப்பவர்கள், என் குடும்பத்துக்கு வேண்டியவர்கள், அங்கெல்லாம் இருப்பதுதான் அதற்குக் காரணமாகும். அவர்களையெல்லாம் சந்திப்பதும், உரையாடுவதும், ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு வீட்டிற்கு விருந்துக்குப் போதலும், (இதில் அங்கே பெருங்குறையிருக்கிறது, நான் பல இடங்களுக்குப் போகாததால்! நான் என்ன செய்ய, நாளில்லையே!) அங்கே நம்மவர்களைக் காண்பதும் பேசுவதும், வெளிநாட்டு உணர்வை எனக்கு உண்டுபண்ணவில்லையென்றாலும், இங்கு திரும்பிய பிறகுதான் எண்ணுகிறேன்—ஆகா! அந்த இனிமையான நாட்கள் இனியும் வருமோ!!

* * *

சிங்கப்பூர் திராவிட கழகத்தாரும் என் தோழர் ஜகதீசனும் நான் அங்கே வரவேண்டுமென்று அழைப்பும் 'டிக்கட்' ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். கடைசி நேரம் வரையில் இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி வரத் தாமதமாகியதால் கிளம்பும் உறுதியில்லாமலேயிருந்தேன். ஆனால் இங்குள்ள ஏடுகளில் நான் ஜப்பான் செல்லப்போவதாகவும் அண்ணாவை அங்கே நான் வரவேற்பேன் என்றும் செய்திகள். வந்திருந்தன. பலரும் என்னைக் கேட்கவும் செய்தார்கள். அண்ணா ஜப்பான் வரும்போது நாமும் போகலாமே!' என்று நான் ஆசைப்பட்டது உண்மை; அண்ணாவிடம் சொன்னதும் உண்மை. ஆனால் ஏடுகளில், இவ்வளவு தூரம் செய்தியாகுமென்று நான் எண்ணவில்லை! இங்குள்ள நாட்தாட்களில் மட்டுமல்ல, சிங்கப்பூரிலும், மலேசியாவிலுமிருக்கும் பெரிய ஏடுகளும் முக்கியத்துவம் கொடுத்துப்போட்டிருந்ததை அங்கு சென்ற பின் அறிந்தேன். ஏப்ரல் 26ந் தேதியன்று என்னை வரவேற்க சிங்கப்பூர் விமான நிலையத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தந்திவந்து காத்துக்கிடந்தது. என் மூத்தமகன் எனக்குப் பெட்டியைத் தேடுவதும், உடைகளை வைப்பதுமான காரியங்களில் ஈடுபட்டிருந்தான். அப்பா விமானத்தில் செல்லப்போகிறார் என்பதில் அவனுக்கோர் ஆனந்தம்! ரிசர்வ் வங்கியின் அனுமதிவராது என்கிற எண்ணத்தில் நண்பகல் உணவை முடித்து, நன்றாகத் தூங்குவோம் என்று இலையில் போய் உட்கார்ந்தேன். "கிளம்புங்கள்! கிளம்புங்கள்!! அனுமதி வந்துவிட்டதாம். டெலிபோனில் சொன்னார்கள்" என்று என் மனைவி சொல்ல, பாதிச் சாப்பாட்டோடு. 'ஏர் இந்தியா'வுக்கு ஒரு கார் சென்று டிக்கட்டை வாங்கிவர, இன்னொரு கார் ரிசர்வ் வங்கி சென்று அனுமதியைப் பெற்றுவர, நண்பர் ஒருவரின் காரில் நான் தொத்திக்கொள்ள மீனம்பாக்கம் வந்து விமானத்தில் ஏறினேன். வெளிநாடு செல்வோருக்கு ரூ. 75 அனுமதிப்பார்களாம். அதைக்கூட நான் வாங்கவில்லை. விமானத்தில் உட்கார்ந்தபோது என் கையில் நயாபைசா கிடையாது!!

நான் இதுவரையில் விமானத்தில் பயணம் செய்தது இல்லை. யாரைக் கேட்பது? என்று பேசாமலிருந்துவிட்டேன். விமானம் கிளம்பியதும், எட்டிப்பார்த்தேன். கிண்டி காந்தியடிகள் நினைவு மண்டபம் காட்சி தந்தது—கடலலைகள் முத்தமிடும் என் மயிலைத் தொகுதியின் குடிசைகள் தென்பட்டன—விமானம் உயரத்தே செல்லச் செல்ல ஒரே நீலமயமாகத் தெரிந்ததே ஒழிய, கடலை நான் காணவில்லை. சிங்கப்பூரை நான் அடையும்போது சுமார் இரவு $8\frac{1}{2}$ மணி! நம் ஊரில் $6\frac{1}{2}$ மணியிருக்கும் அப்போது!! ஆகா, விமானத்திலிருந்து சிங்கப்பூரைப்பார்த்தபோது, வைரங்களை அள்ளித் தெளித்திருப்பதுபோல இருந்தது. அவ்வளவு விளக்குகள்!! இறங்கினேன்—பிரமுகர்களும், தோழர்களும், வந்திருந்தார்கள். தமிழர் சங்கம்—திராவிட முற்போக்குக் கழகம் முன்னணிக் கழகம்—ஆகிய பொது நிகழ்ச்சிகளும், பிரமுகர்கள் அளித்த பெரிய விருந்தும், அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மகிழ்ந்தேன்! அங்கிருந்து 2 ந் தேதி காலையில் காரில் புறப்பட்டு இரவு 9 மணிக்கு இன்னொரு நாடாக விளங்கும் மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூருக்கு வந்தேன். கார்ப் பயணம்! அப்பப்பா, ரோடுகளின் அழகையும் நேர்த்தியையும் எவ்வளவு வர்ணித்தாலும் போதாது. ரோடுகள் மட்டுமா, கார்கள்? இங்கே நமக்கு 'பியட்டு'ம், 'அம்பாசிடரு'ம்தான் தெரியும். அங்கே புத்தம்புதிய 'பென்சு'களையும், 'செவர்லெட்டு'களையும் உலகின் எல்லா வித

மான கார்களையும் காணும்போது...பெருமூச்சுத்தான் வந்தது.

கோலாலம்பூருக்குச் சென்றதும் நண்பர்கள், 'ஜப்பானுக்கு எப்போது?' என்றார்கள். 'ஜப்பானா? அந்த எண்ணமேயில்லை!' என்றேன். இவ்வளவு தூரம் வந்த நீங்கள், முன்பு அண்ணாவும் செழியனும் சென்றதுபோல ஜப்பானைப் போய்ப்பார்த்துவிட்டு வாருங்கள்!' என்றனர் 'இன்னொரு தடவை பார்ப்போம்!' என்று நான் இழுத்தேன். டிக்கட்டுக்கு மட்டும் சுமார் மூவாயிரம் போய் ஆகும்! செலவுக்கும் சேர்த்து ரூ 6000 இல்லாமல் எப்படிப் போக முடியும்? என் பெருமூச்சைப் புரிந்து கொண்ட நண்பர்களும், மலேசியா திராவிட கழகத் தலைவர் இராமசாமியும், ஏதோ பேசினார்கள். என் உறவினர் ஒருவர் அறைக்கு வந்து என் பாஸ்போர்ட்டைக் கேட்டார். கொடுத்தேன். ஒரு மணி நேரத்துக்குள்," 7 ந் தேதி காலை 10 மணிக்கு ஜப்பான் தலைநகர் டோக்யோவில்போய் இறங்கி மறுபடியும் சிங்கப்பூர் வந்து கோலாலம்பூர் வர இந்தாருங்கள் டிக்கட்! ஜப்பான் ஏர்லைன்சார் உங்களுக்கு டோக்யோவில் தங்க ஓட்டல் ஏற்பாடு செய்வார்கள்," என்று சொல்லியபடி விமான டிக்கட்டும், 'விசா' அனுமதியோடும் வந்து நின்றார், அவர். திகைத்தேன்! திகைப்பு மாறுவதற்குள், "இது செலவுக்கு!" என்று சில நூறு டாலர்களைக் கொண்ட ஒரு மணிபர்சை என் பையில் வைத்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை! அங்குள்ளவர்கள் வசதியாக வாழ்வது மட்டுமல்ல, தாயகத்திலிருந்து செல்கின்றவர்களுக்கு எதையும் செய்வார்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டு இது!! எனது இனிய நண்பர் 'தமிழ் மலர்' ஆசிரியர் செல்வக்கணபதி, 'பி. டி. ஐ. மூலம் செய்தி பெற்றேன்! அண்ணா நேற்று ஜப்பான் வந்து சேர்ந்துவிட்டார் ஓட்டல் 'ஓகூரா' வில் தங்கியிருக்கிறார்......"என்கிற தகவலோடு வந்து சேர்ந்தார். என் ஜப்பான் பயணம், எதிர்பாராதபடி நிச்சயிக்கப்பட்டுவிட்டது! எனக்குத் திகைப்பாயிருந்தது!!

இரண்டு நாட்களையும் கோலாலம்பூரிலேயே கழிக்க விரும்பாமல் கார் மூலம் பினாங்கு கிளம்பினேன். வழியெல்லாம் விருந்தும் கூட்டமும் ஏற்பாடு செய்திருந்தார்கள் திராவிட இயக்கத்தினர்! மலேசியாவில் நான் சென்ற ஒவ்வொரு ஊர்களைப் பற்றியும், அடடா! இந்தச் சிறு கட்டுரை போதாது; பிறகு எழுத இருக்கிறேன், எல்லா விபரங்களையும், 'காஞ்சி'யில்.

• • •

காலை 10 மணிக்கு கிளம்பி ஜப்பான் விமானம்–பாங்காக்–ஹாங்காங்–வழியாக இரவு 9-30 மணிக்கு டோக்கியோ சேர்ந்தது. விமானத்திலிருந்து எட்டிப் பார்த்தபோது வைர நெக்லசுகளைக் கோடிக் கோடிக் கணக்கில் போட்டு வைத்ததுபோல ஒளி மயமாகத் தோன்றியது டோக்யோ! இரண்டு நிமிடங்களுக்கு ஒரு விமானம் புறப்படுகின்ற உலகின் மிகப் பெரிய விமானத்தளங்களில் ஒன்று அது. நம்மூர் 'சென்டிரல்' ஸ்டேஷனைப் போல என்று கூடச் சொல்ல முடியாது. இரு நிமிடத்துக்கு ஒரு விமானம்! உலகின் எல்லாப் பக்கங்களுக்கும் செல்வது என்றால்!! பிரமிப்போடு இறங்கிய என் கண்கள், வெளியே வட்டமிட்டன நான் கிளம்புமுன், அண்ணாவுக்கு ஒரு தந்தி கொடுத்திருந்தேன். திரு. பரிமளத்தின் நண்பர் மாரியப்பன் என்பவர் நமது திருவண்ணாமலைத் தோழர், ஜப்பானியப் பெண்ணை மணந்தவர், அவர் வந்திருப்பார் என்று எனக்கு எண்ணம். யாரையும் காணவில்லை! மறு நாள் அண்ணா சொன்னார்கள் என் தந்தி வரவில்லையென்று—நான் போனபிறகு தந்தி வந்து சேர்ந்தது, புது ஊர்! குளிர் வேறு!! திகைத்தேன். என்றாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தேன். 'ஜப்பான் டூரிஸ்ட்' இலாகா சார்பில், வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கு விபரம் சொல்ல, டோக்யோ விமான தளத்தில் ஒரு அமைப்பு இருக்கிறது. அங்கு போய், எனக்காக ஜப்பான் ஏர்லைன்ஸ் (J A L) ஏற்பாடு செய்துள்ள ஓட்டல் 'கான்பார்கோ'வுக்குப் போன் செய்து 'ரூம்' ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கச் சொன்னேன். நான் ஆங்கிலத்தில் பேச, அங்கிருந்த பெண் ஜப்பானில் பதில் சொல்ல, கொஞ்சநேரம் குழப்பமாயிருந்தது. பிறகு அப்பெண் இன்னொருத்தியை அழைத்துவந்தார். ஜப்பான் இவ்வளவு பெரியநாடாக ஆகியிருந்தாலும், ஆங்கிலத்தில் பேசுவோர், கொஞ்சமே. அவரிடம் நான் ஆங்கிலத்தில் விபரம் சொல்ல, டெலிபோன் செய்து கேட்டு, 'ரூம்' போடப்பட்டிருப்பதாகச் சொன்னார். வெளியே வந்ததும் ஒரு டாக்சிக்காரர் வந்தார். ஓட்டல் பெயரைச் சொன்னேன்! 'விர்' என்று அந்த இரவில் டோக்யோவின் வீதிகளில் 70-மைல் வேகத்தில் அந்த 'டாக்சி' சென்ற அழகு! என் நினைப்பு அழகை ரசிப்பதில் இல்லை, ஏனெனில், நான் மலேசியாவிலிருந்தபோது, "நிறுத்திவிட்டுப் போன காரைக் கடத்திச் சென்றுவிட்டார்கள்", "பெரிய பணக்காரரைக் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்" என்கிற செய்திகளைப் பத்திரிகைகளில் பார்த்திருந்ததால், அதே பீதி, உள்ளத்துக்குள். மணி பர்சை எடுத்து உள் சட்டைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டேன். ஆனால், ஜப்பானில் திருட்டுப் பயம் கொஞ்சங்கூடக்

கிடையாது—திருடும் புத்தி அவர்களுக்கில்லையென்பதை பிறகு ஒரு சம்பவ மூலம் நான் உணர்ந்தேன்... கார் ஓட்டலின் முன்பு போய்நின்றது. இறங்கியதும் ஒருவர் ஓடிவந்து என் பெட்டிகளை எடுத்துக்கொண்டு என்னை அழைத்தார். டாக்சிக்குப் பணம் கொடுக்க வேண்டுமே! என்னிடம் ஜப்பானிய நாணயமான 'யென்' கிடையாது. டாலர்தான்!! ஓட்டல் காஷியரிடம் சொன்னேன். நம்மூர் ஓட்டலுக்குள் தங்கச் சென்ஞல், ரூம் கேட்டதுமே, 'அட்வான்ஸ் கொடுங்கள்!' என்பார்கள். அங்கு என் பாஸ்போர்ட்டைக் காட்டியதுமே 'லிப்டில்' கொண்டுபோய் என் அறையைக் காட்டி 'என்ன வேண்டும் சாப்பிட?' என்று கேட்டார்கள். ஜப்பானிய ஓட்டல்கள்! அப்பப்பா! நான் தங்கியிருந்த ஓட்டலின் அறை வாடகை சுமார் 100 ரூபாய். எதைச் சாப்பிடுவது? ஜப்பானிலும் அரிசி உண்டு—ஆஞல் அதோடு அவர்கள் சேர்த்துத் தரும் பன்றிக் கறி, வாசனை போகாதபடி தரும் மீன் வகைகள்...ரொட்டியும் வெண்ணெயும் கொண்டு வரச் சொல்லிவிட்டு, உட்கார்ந்தேன். என்ஞல் தாங்க முடியாத குளிர்! கைகால்கள் எல்லாம் விறைக்க ஆரம்பித்துவிட்டன. வெந்நீரைக் குளிக்கும் தொட்டிக்குள் திருகிவிட்டுக்கொண்டு, நின்றேன். அப்படியும் குளிர் தாங்கமுடியவில்லை. சாப்பிட்டுவிட்டு, அண்ணு தங்கியிருக்கிற ஓட்டலுக்கு டெலிபோன் செய்து விசாரித்தால் எந்தத் தகவலையும் பெற முடியவில்லை, நம்முடைய 'ஸெட்டி' போன்ற இடங்களிலிருப்பதுபோல அறையைச் சூடு செய்யும் (Heates) உண்டா என்று ஓட்டல்காரரைக் கேட்டால், அப்படிப்பட்ட கணப்புகள் 'மழைக் காலத்தில்தான்' வைப்பார்களாம்! இரண்டு கம்பளிப் போர்வைகளைக் கொடுத்தார்கள். மூட்டையைப்போல எல்லாவற்றையும் சுற்றிக்கொண்டு படுக்கையில் விழுந்தேன், தூக்கம் வரவில்லை! அண்ணுவை வேறு காண முடியவில்லை—காலை முதல் இரவு வரை 4000 மைல் பறந்து வந்த களைப்பு வேறு—இனம் தெரியாத ஊர்—ஏற்கனவே நான் ஒரு நோயாளி—என்ஞகுமோ—ஊரில் குழந்தைகள் எப்படியிருப்பார்களோ — திடீரென்று நமக்கு ஒன்று ஆகிவிட்டால் 'எந்தச் சொத்தும் சேர்த்துவைக்காத நிலையில்' குடும்பம் என்ஞகுமோ—யார், நாம் போன பிறகு, உதவப் போகிருர்கள்?—சரி, அண்ணு இருக்கிருர்!......இப்படியெல்லாம் ஓராயிரம் எண்ணங்கள்—மிரண்டு கொண்டிருந்த என் மிரட்சியை அதிகப்படுத்துவதுபோல கடகடவென்று ஒரு சிறு ஓசை! கட்டில் கொஞ்சம் அசைந்ததும் என்ன வென்று பார்ப்பதற்குள் ஒன்றும் தென்படவில்லை. மறுநாள் நான் விசாரித்தபோது சொன்ஞர்கள் டோக்யோவில் ஒவ்வொரு நாளும் இரவு 12 மணிக்கு சிறு நில நடுக்கம் ஏற்படுவதுண்டாம்! வெகு சாதாரணமாகச் சொன்ஞர்கள்!!

காலையில் எழுந்தேன்—ஜப்பானுக்கு வரவேண்டும் என்று ஆசைப்பட்டோம்—யாரோ வாங்கிக் கொடுத்த டிக்கட்—பேசாமல் அடுத்த விமானத்திலேயே ஊருக்குத் திரும்பி விடுவோம்—நமக்கு வேண்டாம் இந்த வம்பு–என்று முடிவுசெய்து கொண்டே, நடுக்கும் குளிருடன் 'லிப்டில்' இறங்கிக் கீழே வந்தேன். 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் திரு. கஸ்தூரி ஒருமுறை ஜப்பானிலிருக்கும் அவர்கள் நிருபர் நாராயணன் என்பவரைப்பற்றிச் சொன்னது கவனத்துக்கு வரவே, 'நாம் வந்ததை அவராவது அண்ணுவிடம் சொல்லட்டும்' எனும் எண்ணத்தோடு, டெலிபோன் டைரக்டரியில் அவர் நம்பறைக் கண்டுபிடித்து, போன் செய்தேன். "ஹலோ, மிஸ்டர் அரங்கண்ணலா? எப்ப வந்தீங்க? என்கிற தமிழ்க் குரலைக் கேட்டதும் பூரித்துப் போனேன். "குளிர் ஒன்னும் செய்யாது! பயப்படாதீங்க.... அண்ணுவுடைய போன் நம்பர் இது. அண்ணு தூங்கிஞலும் தூங்குவார். சொக்கலிங்கத்துக்குப்போன் செய்யுங்கள்..." என்ருர், அவர். பயம் பாதி போயிற்று என்ன ஆஞலும் ஒரு தமிழர் இருக்கிருரே!!

திரு. சொக்கலிங்கம்—முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர்—'ஓகூரா' ஓட்டல் பெயரைச் சொல்லி, 10 நிமிடங்களுக்குள் வந்து விடுங்கள் என்ருர். எப்படிச் செல்வது? நான் தங்கியிருந்த ஓட்டலில் சொன்னேன்—ஒரு டாக்சி வந்து நின்றது—'சான் பான்ஜோ' என்று குறிக்கப்பட்ட ஒரு தீப்பெட்டியை எடுத்துப் பையில் வைத்துக்கொண்டேன். (ஜப்பானில் ஒவ்வொரு ஓட்டல்–வியாபார நிலையங்களில்–இப்படிப்பட்ட தீப்பெட்டிகள் நிறையக்கிடக்கின்றன. காசு கொடுக்காமல் அவைகளை எடுத்துக் கொள்ளலாம். முகவரி தெரியாமல் அலையும்போது, ஜப்பானியரிடம் அத் தீப்பெட்டியைக் காட்டிஞல், நாம் எங்கே செல்ல விரும்புகிருேம் என்பதைப்புரிந்து, கொண்டு விட்டுவிடுகிருர்கள்.) டாக்சி நேரே 'ஓகூரா' ஓட்டலுக்குச் சென்றது.

ஓட்டலா! ஏ, அப்பா! ஒரு பக்கத்தில் வரிசை வரிசையாக 50 60-க்கு மேற்பட்ட டெலிபோன்கள்—ஏதோ இயந்திரங்களைப்போல இப்படியும் அப்படியும் செல்லும் மனிதர்கள்—இறங்கியபடியும் ஏறியபடியும் இருக்கும் 'லிப்டு'கள். எந்தப்பக்கம் போவது, எப்படிப் போவது என்று புரியாமல் திகைத்து நின்றேன். அண்ணு தங்கியிருப்பதை அறிவிப்பதற்காக ஓட்டலின் முகப்பில் பிரம்மாண்டமான ஜப்பானியத் தேசியக் கொடியையும் இந்தியத் தேசீயக் கொடியையும் பறக்கவிட்டு மரியாதை செய்திருந்தார்கள். திகைத்து நின்ற என்னை, "அண்ணுவைப் பார்க்கணுமா? நீங்க அரங்கண்ணல் தானே!" என்கிற தமிழ்க் குரல், மீட்டது. மூர்த்தி என்பது அவர் பெயர்! என் மயிலைத் தொகுதிக்காரர்! டோக்யோவில் 'அஜந்தா ஓட்டல்' எனும் பெயரில் நடக்கும், ஒரு அருமையான ஓட்டலின் உரிமையாளராம், அவர் என்னை திரு சொக்கலிங்கம் அவர்களின் அறைக்கு இட்டுச் சென்ருர். அந்த அறைக்கு எதிர் அறையில் அண்ணு இருந்தார். கதவைத் தட்டினேன். திறந்தபோது அண்ணுவுக்கு ஒரே திகைப்பு,!!

* * *

அண்ணுவோடு கியுட்டோ—ஓகாரா—முதலிய ஊர்களுக்கு நண்பர் மாரியப்பனுடன் சென்றேன். அண்ணுவை விமானம் ஏற்றிவிட்டு நண்பர் மாரியின் துணையுடன் டோக்யோவை ரசித்துவிட்டு (ரசித்துவிட்டா? எவ்வளவோ, எழுத வேண்டும் ஜப்பானைப் பற்றி! எழுதுகிறேன்...) 12-ந் தேதி மாலை ஜப்பானை விட்டுக் கிளம்பி ஹாங்காங் வந்தேன். வரும்வழியில் ஒரு மணி நேரம் பார்மோசாத் தீவின் தலைநகரமான தைபேயிலிருந்தேன். ஹாங்காங் தீவு—சிங்கப்பூரையும், டோக்யோவையும் தோற்கடிப்பதுபோல இருந்தது. ஆகா! குன்றின் மீதுள்ள அத்தீவும்—அருகிலுள்ள கோவ் லோன் பகுதியும்!! வர்ணிக்கவே, வார்த்தைகளிலிருக்க முடியாது. இரண்டு நாட்கள் அங்கே தங்கினேன். கோலாலம்பூரிலிருந்து கிளம்பும்போது என் நண்பர் ரகிமான் என்பவர் சில முகவரிகளைக் கொடுத்திருந்தார். நான் டோக்யோவிலிருந்து கிளம்பு முன்பு தந்தி கொடுத்திருந்தபடியால் விமான நிலையம்

வந்திருந்தனர் அந்த நண்பர்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்—சிலர் சென்னையில் படித்தவர்கள். அவர்களுடைய விருந்தினஞக இரண்டு நாட்கள் அங்கே தங்கினேன். அங்கிருந்து 30 மைல் காரில் சென்று செஞ்சீனுவைப் பார்த்தேன்! ஹாங்காங்—இப்போது, பிரிட்டிஷாரின் கையிலிருப்பது; ஆனுல், சீனர்கள்தான் அதிகம். சீனுவின் கிராமத்தைக் காட்டினுர்கள்—பார்த்தேன்—'பைனுகுலர்ஸ்' மூலம் பார்த்தேன் — வியந்தபடி பார்த்தேன் — 'இந்த சீனு தானே நம்மீது படையெடுத்தது' என்று எண்ணியபடி பார்த்தேன்!!

ஹாங்காங்கிலிருந்து பாங்காக் சேர்ந்தேன். தாய்லாந்தின் தலைநகரம், அது. நண்பர் ரகிமானின் உறவினர்கள் இங்குமிருக்கிருர்கள் காரைக்காலைச் சேர்ந்த ஒரு நண்பரும் நண்பர் மகமூதும் அவர் குழந்தை நாதிராவும் அவரது மனைவியும் குடும்பத்தோடு விமான தளத்துக்கு வந்திருந்தார்கள். இனிய நண்பர்கள்! அவர்களுடைய விருந்தினஞக இரண்டு நாட்கள் தங்கினேன்—தாய்லாந்து, நமது இந்தியாவைப் போலிருக்கிறது, பலவிதங்களில். சம்ஸ்கிருத மொழியின் பெரும் பகுதி சயாமிய மொழி எனலாம். தாய்லாந்தின் தேசீயக் கதை நமது ராமாயணம்தான்; ஆனுல் 'ராம்கியான்' என்கிருர்கள். ஆளும் மன்னர் பெயர் பூமிபாலர்! நாலாவது எட்வர்ட், எட்டாவது ஹென்றி என்பதுபோல, இப்போதுள்ள சயாம் மன்னர் 'நான்காவது ராமர்' என்று அழைக்கப்படுகிருர். ராஜவீதி—இராவணன் — பார்மசி—ராமா ஓட்டல்—சீதா மதுபானக் கடை—பத்மா—ராமச்சந்திர மூர்த்தி—என்கின்ற பல பெயர்களைக் கண்டேன்! சயாம பல்கலைக் கழகத்தின் பெயர் தர்மசாக் யுனிவர்சிடி 'தர்ம சாகி' என்ருல் தர்ம சாஸ்திரம் என்பதன் மருஉவாம்!! சுமார் 60 மைல் வரையில் படகில் சென்றேன்—கிராமங்கள்—அழகுத் 'தேவதை'களைப் போல விளங்கும் பெண்கள்—மரகதப் பச்சையில் செய்யப்பட்ட புத்தர்—தூங்கும் புத்தர்—அப்பப்பா! ஒரே புத்தர் கோயில்கள்தான் ஊர் முழுதும்!!—எல்லாம் பார்த்தேன். தாய்லாந்து நாட்டின் இலச்சினை என்ன தெரியுமா? கருடன்! ஒரு புத்தர் கோயிலில் அந்த நாட்டில் ஆதியில் மருத்துவம் செய்த ஒருவரது சிலையை வைத்து எதிரே அவர் மருந்து அறைத்த கல்லையும் குழவியையும் வைத்திருக்கிருர்கள். அதைப் பார்த்தபோது, நமது ஊர் சித்த வைத்தியம் எனக்குக் கவனத்துக்கு வந்தது. பாங்காக்கிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்டேன்!!

• • •

ஜப்பானுக்குச் சென்ற மறுநாள் இரவு அண்ணு அவர்கள் என்னை ஒரு ஓட்டலுக்கு அழைத்துச் சென்ருர்கள். பூகம்பம் நிரம்பிய டோக்யோவிலுள்ள அந்த ஓட்டலில் (ஓடானி ஓட்டல்) மொத்தம் 17 மாடிகள் உள்ளன. 17-வது மாடி, பம்பரம் விட்டால் சுற்றுமே அதுபோல, சுற்றிக்கொண்டேயிருக்கிறது. ஒருதடவை அந்த மாடியைச்சுற்றிவர ஒரு மணி நேரம் ஆகிறது. அந்த மாடியிலிருந்து பார்த்தால் டோக்யோவின் முழு வனப்பும் தெரிகிறது. சுற்றுகின்ற மாடிமட்டுமல்ல—ஒரே தண்டவாளத்தில் ஓடும் மோனே ரயில்—மணிக்கு 120 மைல் வேகத்தில் ஓடும் இகாரி—ஜப்பான்! அந்தப் பெயரே பிரமிப்பின் மறுமதிப்பு எனலாம். ஓடானி ஓட்டலின் மாடியிலிருந்தபடி டோக்யோ நகரைக் காட்டினுர். ஒருமணி கழித்து கீழே, தரைக்கு வந்து, நண்பர் மாரியப்பனின் துணைவியார் மருசயா ஓட்டின் காரில், ஓட்டலுக்குச் சென்ருேம். எனினும் இந்த நிகழ்ச்சி என் மனதில் ஆழப் பதிந்தது. எவ்வளவு உயரத்துக்குப் போனுலும், தரைதானே, நமக்கு எப்போதும் சொந்தமான இடம்! இதை விளக்கத்தான் அண்ணு அவ்வளவு உயரத்துக்கு அழைத்துச் சென்ருரோ, என்னவோ! என் உள்ளம், அலை அலையாகப் புரண்டு கொண்டிருந்த மேகக் கூட்டங்களுக்கு மத்தியிலும்—இடியும் மின்னலும் முழங்கிய வண்ணமிருந்தும் அவைகளைச் சட்டை செய்யாது பல உயிர்களுடன் பறந்து சென்றபடியும் இருந்த ஆகாயவிமானத்தில் அமர்ந்து கொண்டிருந்தபோது, இந்த நினைவையே அசை போட்டது. உயரப் பறக்கிருேய்! என்ருலும், எவ்வளவு அச்சமும் யோசனைகளையும் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. எவ்வளவுதான் பறந்தாலும் நமக்குரிய பூமிக்கு வராமலிருக்கமுடியுமா? 'நமக்குரிய' இடத்தைச் சேரும்போது என்ன மகிழ்ச்சி ஏற்படுகிறது!! மீனம்பாக்கம் விமான நிலையத்தில், புதிய நாடுகளைக் கண்ட நிலையில், நான் இறங்கியபோது எனக்கு அந்த மகிழ்ச்சி தான் ஏற்பட்டது என் பூமி என் தாயகம்—என் ஊர்—என் மக்கள்—இந்த உணர்வு, ஒவ்வொருவரும் வாழ்நாளில் ஒரு தடவையாவது வெளிநாடு சென்று வர வேண்டும். ஆனுல் முடியுமா? அனுமதிக்காதே இந்திய ரிசர்வ் வங்கி! அதுதான் என்ன செய்யும்? எல்லோரையும் அனுமதிக்க இந்தியா இன்னும் 'ஏழை'யாகத்தானே இருக்கிறது!!

★

திருமணம்!

எல்லா மனிதர்களுடைய இன்பமோ துன்பமோ, திருமணத்தைப் பொறுத்தது. —பைரன்.

மன ஒற்றுமையும் நோக்கத்தில் ஒற்றுமையும் இல்லாவிடில், திருமணத்தில் அதைப்போன்ற வேற்றுமை வேறில்லை. —டிக்கன்ஸ்.

என் மனைவி நீடித்து உழைக்கக்கூடிய திருமண உடையைத் தேர்ந்தெடுத்தது போலவே, நான் என் மனைவியைத் தேர்ந்தெடுத்தேன். —கோல்டு ஸ்மித்.

நல்ல பெண்ணை மணந்திருப்பது, வாழ்க்கைப் புயலில் ஒரு துறைமுகமாகும்; தீய பெண்ணை மணந்திருப்பது, துறைமுகத்திலேயே புயல் வீசுவதாகும். —ஜே. பி. ஸென்.

தூக்கு மேடை ஏறுவதும், திருமணம் செய்து கொள்வதும் விதியினுல் ஏற்படுபவை. —ஷேக்ஸ்பியர்.

உற்சாகத்துடனும், இனமுகத்துடனும் சிறு சிறு தியாகங்கள் செய்வதைப் பொறுத்திருக்கிறது மணவாழ்க்கையின் இன்பம். —ஸெல்டன்.

தொகுப்பு: தயாள்.

சிறுகதை உலகம்

உண்மையும், பொய்யும் கலந்து கிடக்கும் வாழ்க்கையின் உண்மைகளை கவிஞன் தான் காண்கிறான்; அந்த உண்மைகளில் தான் கற்பனை மெருகேற்றி பாடவும் செய்கிறான்.

அதுபோல் வாழ்க்கை உண்மை இல்லாமல் சிறு கதையும் இல்லை; நெடுங்கதையும் இல்லை.

சிறு கதையின் நீளம் இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று அளவு கோலால் நிர்ணயம் செய்ய முடியாது. உலகிலே மிகச்சிறிய சிறுகதை இரண்டே இரண்டு வாக்கியங்களில் முடிந்துவிடுகிறதென்று சொல்லப்படுகிறது. அதற்கு ஆதாரமாக இந்த துணுக்கையும் சொல்வார்கள்.

"பேய் பிசாசுகளை நான் நம்பவில்லை என்றார் ஒரு தனவான், ஒரு புராதனப் பொருட்காட்சி சாலையில் அந்தி மயங்கி மின்சார விளக்கு ஏற்றுவதற்கு முன், தம்முடன் இருந்தவரிடம் 'ஓ' நீர் நம்பவில்லையா?" என்று கேட்டுக்கொண்டு திடீரென்று மாயமாக மறைந்தார் உடன் இருந்தவர்.

அரைமணி நேரம் முதல் ஒன்றிரண்டு மணிநேரத்தில் படிக்கக் கூடியது 'சிறுகதை' என்று கதாசிரியரும் ரசிகருமான எட்கர் ஆலன்மோ கூறியிருக்கிறார்.

கதை, கவிதை, நாடகம் என்ற மூன்றையும் இலக்கியத்தின் முக்கியமான வாசல்கள் என்று கூறலாம். இம் முப்பெரும் கலைஞர்களுக்கும் படைப்புத்திறன் இன்றியமையாதது. சுய அனுபவத்திலிருந்து படைக்கிற சக்திதான் கலைஞனின் மூலதனம்.

கதையுலகில் மத வெறிக்கோ, இன வெறிக்கோ, நிற வெறிக்கோ இடமில்லை. கலைகளையும், இலக்கியத்தையும் ஆத்மானுபவத்திற்கு வழித்துணையாகக் கொண்டிருந்தார்கள் நம் முன்னோர்கள். இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிதான். சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல்கள். மனித லட்சியத்தின் உயிர்நாடி. கடவுள் கனவு கண்டார்; இந்த பிரபஞ்சம் பிறந்தது. கவிஞன் கனவு கண்டான் இலக்கியம் பிறந்தது. கலை என்பது ஒற்றுமையில், தாளம் இசை இரண்டும் கலந்தது போல், எழுந்த அழகுணர்ச்சி. பிரபஞ்சம் அந்த கட்டுக்கோப்பில் அடைபட்டது. வாழ்க்கையின் அர்த்தத்தை சொல்வது தத்துவம். வாழ்க்கையையே சொல்வது அதன் ரசனையை சொல்வது இலக்கியம். கலை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் பிரதிமை; அழகின் வடிவம். மனித உணர்ச்சியின் பிரதிபலிப்புதான் இலக்கியம், கவிதை, கதை எல்லாம்.

சிறு கதையின் ஜீவ நாடி ஒன்று அதில் எடுத்தாளப்படும் சம்பவம் அல்லது நிகழ்ச்சி தனிப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். சிறுகதை வாழ்க்கையின் சாளரம், என்றால் நாவல் வாழ்க்கையைப்பிரதிபலிக்கும் நிலைக்கண்ணாடி. வாழ்க்கையின் சிக்கல்களை. அதன் உயர்வை, அதன் சிறுமைகளை, உலாவும் பாத்திரங்களான மனிதக் கூட்டத்தின் சலனத்தில், அவற்றின் குண விஸ்தாரத்துடன், சிருஷ்டிப்பதுதான் நாவல். நாவலுக்கு கால எல்லை கிடையாது.

நவீனக் கதை வளர்ச்சியில் ஷெர்லாக் ஹோம்ஸ் என்ற பகுத்தறிவுப் பட்டாக்கத்திக்கு ஒரு இடம் நிச்சயமாக உண்டு. ஆனால் அவரை சிறந்த இலக்கிய ஆசிரியராக மதிப்பிடமுடியாது.

வால்டைரின் கதைகளில் பதினெட்டாம் நூற்றாண்டு பிரஞ்சு சமுதாய வாழ்வின் கேலிச்சித்திரங்களைக் காணலாம். அந்த நாளிலிலேயே அரசியல் சுதந்திரத்திற்கும், சிந்தனைச் சுதந்திரத்திற்கும் வாக்குச் சுதந்திரத்திற்கும், நாவாலும், பேனாவாலும் போராடிய வால்டைர், மாப்பஸானுக்கு முன்பே சிறுகதைத்துறையிலும் பொதுமக்களுக்கு விருப்பமான ஒரு பெருவழியைக் காட்டியிருக்கிறார். பால்ஸாக் என்பவர் மோப்பஸானின் காலத்திற்கு முன்பேபுகழ்பெற்றிருந்த பிரஞ்சு ஆசிரியர்களில் ஒருவர். இவரை சிறுகதைக் கோமாளி' என்பார்கள்.

லைலா பிங்கினி என்ற சிங்காரப் பெயருடைய நாவலாசிரியை சிங்கார நாவல்களாக எழுதிக்குவித்துவிட்டார். அவளுடைய மகன் ஹேம்ஸ் என்பவனும் ஒரு நாவலாசிரியன். ஆனால் இவன் திடுக்கிடும் கோரக்கதைகளையும் துப்பறியும் கதைகளையும் எழுதி வந்தான்.

பிரஞ்சு கதாசியர்களை விட்டால் பிரிட்டிஷ்சிறுகதைகளிலுள்ளஹாஸ்யத்தின் பரப்பையும் ஆழத்தையும் போக்கையும் வேகத்தையும் தெரிந்து கொள்வதற்கு டபிள்யூ ஹேக்ப்ஸ், ஹட்சின்ஸன்ஜில் பெர்ட், ஜார்ஜ் ப்ரமிம்ஹாம் முதலியவர்களின் நகைச் சுவைக் கதைகளைப் படித்து அனுபவிக்கலாம்.

ஓஹென்றியின் கதைகள் ஒரு நகைச்சுவைப் பொக்கிஷம் — சிறுகதை ரசிகர்களுக்கு பெரும் பொக்கிஷம்.

மேல்நாட்டில் புகழ் பெறத் தொடங்கிய புதினங்கள், சிறுகதைகள் எல்லாம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தோன்றத் தொடங்கின. ஒரு நவீனத்தின் கதைக்கு, பாத்திரப்படைப்பு, உரையாடல் ஆகியவற்றோடு, கால இடப் பொருத்தங்களும் நன்கு அமைத்து வாழ்க்கைத் தத்துவம் விளக்கப் பெறுதல் வேண்டும். கதை கற்பனையாயினும் சமுதாயச் சாயல் நன்குப் பொருத்தப் பெற்று படிப்போர் உள்ளத்தில் உண்மையான வாழ்க்கைப் போக்கைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைவதே உயர்ந்த புதினமாகும்.

இலக்கியம் விலையாவதற்கு மட்டுமல்ல; அறிவை வளர்க்க மட்டுமல்ல; பொழுதைப் போக்குவதற்கு மட்டுமல்ல என்பதை உணரவேண்டும். அனுபவிப்பவர் உள்ளம் நல்ல உள்ளமாகவேண்டும். எனவே நல்ல உள்ளம் உருவாக வேண்டுமானால் வாழ்க்கை அனுபவங்களின் பயனை எடுத்துச் சொல்லும் கதைகளை எழுத்தாளர்கள் எழுத வேண்டும்.

தமிழ் இலக்கியத்திற்கு சிறுகதை ஒரு புதுப்புனல். சமீபத்தில் தமிழகத்தில் சிறுகதை உலகில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. புத்தம் புதிய எழுத்தாளர்கள் நித்தம் நித்தம் எண்ணற்ற இதழ்களில் எழுதிக் குவிக்கிறார்கள். அப்படிப்பட்ட எழுத்தாளர்கள் தங்கள் சிந்தனைகளின் மூலம் உலக அரங்கில் தமிழுக்கு, தமிழ்ச்சிறுகதை உலகிற்குத் தகுந்த இடத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்று ஆசைப்படுவோம். அவ்வப்போது சமுதாயத்தில் எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த இலட்சியங்களையும் அறிவுக்குட்பட்ட கருத்துக்களையும் வளர்ப்பதற்கு சிறுகதையை ஒரு சிறந்த இலக்கிய சாதனமாகப் பயன்படுத்தும்படி எழுத்தாள நண்பர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்வோம்.

—இரணியல் 'கலை'

காலத் தச்சன் கட்டளை!

அன்புள்ள நண்பா!

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்பது வள்ளுவம். எவை எவைகளின்றும் ஒருவன் தன்னை விலக்கிக் கொள்கிறானோ, அவன், அவை அவைகளினால் விளையும் தொல்லைகளிலிருந்தும் விலக்குப் பெற்றவனாவான் என்பதுதான் இதன் விளக்கம். பச்சையாகச் சொல்ல வேண்டுமானால், நடப்பது நடக்கட்டும்; நமக்கென்ன? என்று ஒருவன் எந்த ஒன்றிலும் அக்கறை கொள்ளாமலிருக்க வேண்டும் என்பதாகும்,

மனித உள்ளங்கள் பொதுவாகவே ஆசாபாசங்களுக்கு எப்போதுமே இலகக் கூடியதாகும். கற்பாறை போன்று இருப்பதற்கு எல்லாருமே பக்தவத்சலங்களாக விருந்துவிட முடியாது. என்றாலும் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்றொரு பழமொழியும் தமிழகத்தில் புழக்கத்திலிருப்பதனால், பக்தவத்சலங்கள்கூட கரையக்கூடிய ஒன்றும் இருக்கிறது என்பதும் பெறப்படும். ஆகவே, ஆசாபாசங்கள் என்பது அனைவருக்கும் பொதுவாகி விடுகிறது. :முற்றுந் துறந்து முனிபுங்கவர்களாகி விட்டோர்கூட, தம் பற்றுப்பட்ட தன்மையிலிருந்து விலகி, பற்றற்றான் பற்றினைப் பற்றும் பாதையில் மாறி, பற்றினைப் பற்றி இருக்கிறார்கள் என்று நம் நாட்டு புராணங்கள் கதை பலவும் கூறக் கேட்டிருக்கிறோம்.

கோவணாண்டி என்று கேலிக்காக அல்ல—எளிமையின் எடுத்துக் காட்டுக்குப் பயன்பட்ட காந்தியடிகள் கூட பற்றற்றவர் என்று கூறிவிட முடியாதே! வெளியில் தெரிந்த அளவுக்கு அவர் நாட்டையும், இந்துஸ்தானியையும் காதலித்திருக்கிறார்.

விவேகானந்த அடிகளார்கூட, மக்களுக்குத் தரும் அறிவுரைகளை மிக மிகக் காதலித்திருக்கிறார்,

பற்று விடற்குப் பற்று என்றுதானே பொய்யாமொழியார்கூட "பற்று" என்றார். எப்படி நண்பா முடியும் யாதனின், யாதனின் நீங்க? எப்படி முடியும் நோதல், அதனின் அதனின் இல்லாமற் போக?

புறச் சூழ்நிலைகளால் எவ்வளவுதான் இதயம் துன்புறுத்தப்பட்டு இருந்தாலும், தூணைப் பற்றி, அதனில் தன்னை மறைத்துக் கொண்டு முகத்தாமரையை மட்டும் காட்டி, புன்முறுவல் செய்யும் மனைவியின் அன்பினைக் காணும்போது, புறத் துன்பங்கள் எல்லாம் ஒருவனை என்ன செய்துவிடும்?

அந்தப் புன்முறுவலுக்குப் பலியாகி தங்களை மறந்து விடுகிறபோது, அதன் விளைவாக விளைகின்ற வேதனைகள்—விலைகொடுத்து வாங்கப்பட்டவை அல்லவா! கடைக்கண் வீச்சு தந்த நோதலல்லவா அது!

அலுவலகத்தில் சகத் தோழர்களால் ஏதோ ஒரு காரணத்துக்காக ஆத்திரப்படுத்தப்பட்டு, அந்த ஆத்திர உணர்ச்சி குன்றாமலேயே வீட்டுக்குள் நுழையும்போது, அங்கே கவிழ்ந்துகொண்டு மழலை உமிழ்ந்து மனத்தைப் பறிக்கும் குழந்தையைக் கண்டுவிட்ட மாத்திரத்தில் எல்லா உணர்ச்சிகளுமே ஒளிந்தோடிக் கொள்வது எதனால்? யர்தனின் யாதனின் நீங்காமை அல்லவா காரணம்?

அதே குழந்தை நோய்வாய்ப்பட்டு துடிதுடிக்கும் நேரத்தில் மனிதன் படும் துன்பம், அதன் அறுவடை அன்றோ! நோதல், அதனின் அதனின் இல்லாமற் போகுமா?

குறளின் கூற்று தவறானது என்ற முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறாயா நண்பா! தவறுதான்! குறளில் அல்ல! உன் முடிவில்!!

எழுஞாயிறு எழுந்தது முதல், இன்னும் சொல்லப் போனால் "கருக்கல்" கட்டத் தொடங்கி, விடிவெள்ளியின் தோற்றம் முதல், அலுத்துக் களைத்து படுக்கையில் விழுந்து கண்ணை மூடி தன்னை மறந்துறங்குகின்ற வரைக்கும் மனிதனையும், அவன் இயல்புகளையும் கோணம் கோணமாக, அணு அணுவாக அலசி ஆராய்ந்து இவ்வளவுதான் "மனிதன்" என்று எடுத்துக்காட்டி இருக்கின்ற திருக்குறளில் கருத்துப் பிழையில்லை; அந்த மனிதன் தன் இயல்பு காரணமாக இடும்பைப் படும்போது, அவனுக்குத் தரப்பட்ட ஒரு அறிவுரை அது! அது எப்படித் தவறானதாக இருக்க முடியும்?

மனிதன் எத்தனை எத்தனையோ வழிகளில் தவறு செய்ய முடியும். தவறு செய்துவிட்டபோது, அதனை எண்ணி வருந்துவதும் மனிதர்கள் சிலருக்கு இயல்பேயன்றோ! அதனாலேயே எண்ணித் துணிக கருமம்! என்றும் கூறிவிட்டு, யாதனின் யாதனின் நீங்குதல் பற்றியும் கூறிவைத்தார்!

நண்பா! இந்தப் பின்னணியுடன் கொஞ்சம் அரசியலுக்கு வருவோம்!

அரசியலில் ஈடுபட்டிருக்கும் எந்த ஒருவரும் யாதனின் யாதனின் நீங்குதல் பற்றிச் சிந்திக்க முடியுமா?

சிலவற்றில் முற்றிலுமாக நீங்கி இருக்க முடியும்; சிலவற்றில் பட்டும் படாமலும் இருக்க முடியும்; சில

வற்றில் கவனம் மட்டுமே செலுத்திக் கொண்டிருக்க முடியும்; சிலவற்றில் அக்கறை கொண்டிருக்க முடியும்; இன்னும் சிலவற்றில் ஈடுபாடு கொண்டிருக்க முடியும். ஆனால் அனைத்திலுமே விலகி இருத்தல் என்பது முடியாது. முடியவே முடியாது!

'படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய அதே காமராசர், இன்னொரு சந்தர்ப்பத்தில், தொகுதியைச் சுற்றிப்பார்த்துதான் முடிவு கூறுவேன் என்று கூறும் நிலை எதனால் ஏற்படுகிறது? நீங்க முடியாத காரணத்தால் அல்லவா?

தோற்றுப்போனேம்! தோற்றேபோனேம்!! என்ற நிலையிலிருக்கிற காமராசர்கூட சுற்றிப்பார்த்து முடிவுரைக்கிறேன்! என்கிற அளவுக்கு வருகிறார் என்றால், 'பற்று' இன்னமும் அவரைப் பற்றிக்கொண்டிருக்கிறது என்பதுதான் பொருள். யாதனின் யாதனின் நீங்க முடியாத நிலை என்று பொருள்!

கட்சி ஒருவரை ஒரு தொகுதிக்கு வேட்பாளராக இருக்கவேண்டும் என்று விரும்பிக் கேட்கிறபோது, முடியும் அல்லது முடியாது என்று மட்டும் பதில் வருமானல் அதில் தெளிவு இருக்கிறது என்று பெறமுடியும். 'சிந்தித்துச் சொல்கிறேன்' என்றால்கூட, ஆள் அம்பு, பண பலம், வாய்ப்பு வசதிபற்றிச் சிந்திக்கப் போகிறார் என்று கொள்ளலாம்!

'சுற்றிப்பார்த்துச் சொல்கிறேன்' என்ற பதிலிலிருந்து நண்பா, தான் அதிலிருந்து முற்றிலும் விலகி விட விரும்பவில்லை—ஆனால் வெற்றிக்கு இருக்கும் வாய்ப்புபற்றி அறிந்து கொண்டு பதில் தருகிறேன் என்று தானே பொருள் கொள்ள முடியும்?

எப்படியும் தன் கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தத் தான் போகிறது. காமராசர் மறுத்துவிட்டால்கூட காங்கிரசுக் கட்சியின் சார்பில் யாரோ ஒருவர் நிற்கப்போகிறார். தொகுதிச் சூழ்நிலை காரணமாக-அந்த வேட்பாளர் தோற்றாலும், அந்தத் தோல்வி தனக்கு வந்துவிடக் கூடாது என்ற அச்சம் ஆட்டிப்படைக்கிறது என்று யார்தான் பொருள்கொள்ள மாட்டார்கள்!

வெற்றி வாய்ப்பென்றால் அது தனக்கு இருக்கட்டும்; தோல்வித் துயர் என்றால் அது வேறொருவருக்காகட்டும் என்றல்லவா காமராசர் கருதுகிறார்! அதுதானே "சுற்றிப்பார்த்து" சொல்லும் பதில்! நீங்கி விடவும் முடியவில்லை! நெருங்கி நிற்கவும் முடியவில்லை. பற்று நண்பா! அதுவும் அரசியல் பற்று!

வெற்றியோ தோல்வியோ, கட்சி விரும்புகிறது என்கிறபோது நிலைமை எப்படிப்பட்டதாக இருந்தால் என்ன?

கடந்த கால அனுபவத்திலிருந்து காமராசருக்கு நோதல் அதிகம்தான்! ஆனாலும் யாதனின் யாதனின் நீங்க முடியாத அளவுக்கு சபலமும் கூடவே!

காமராசர் கட்சியை மதிப்பதைவிட, சூழ்நிலைகளை மதிக்கிறார். அதனாலேயே தன்னை முன்னிருத்தி வெற்றி வாய்ப்புகளை ஆராய்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதன் மூலம் காமராசர், தனது காங்கிரசுக் கட்சியை எதிரி முகாம்களுக்குக் காட்டிக் கொடுக்கிறார். அறிந்தோ அறியாமலோ இப்படிச் செய்திருக்கிறார் அவர்! பதவி எனும் நங்கை, பல்காட்டிச் சிரிக்கும் போது 'பற்று' பற்றுமலாபோகும்!

கவிஞருக்கு ஒரு முத்தம்!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்காட்லாந்து நாட்டின் அரசியாக இருந்தார் மார்கரட் என்ற அம்மையார். சிறந்த பண்பும் மிகுந்த பக்தியும் உடையவர். அவற்றின் மூலம் தம்முடைய நாட்டு மக்களை நன்னெறி ஒழுகும்படிச் செய்தவர்.

ஒருநாள் அலெய்ன் என்னும் கவிஞர் அரசியைக் காண்பதற்காக வந்தவர், காறு முன். வந்த களைப்பால் அரண்மனையில் ஒரு பக்கத்தில் படுத்துத் தூங்கிவிட்டார்.

அரசி அந்தப்பக்கம் வர நேர்ந்தது. அவர் கவிஞரைக் கண்டதும் அருகில் சென்று முத்தமிட்டார்.

தம்முடன் வந்த தோழிகளின் பக்கம் திரும்பி அரசி கூறினார்: "நான் முத்தமிட்டது மனிதனையன்று. அழகான கவிகள் சொன்ன வாயையே!"

பற்றவும் முடியவில்லை—பாவிகள் ஏற்படுத்திவிட்ட சூழ்நிலையால்! நிற்கிறேன் என்று கூறவும் முடியவில்லை; முடியாது என்று மறுக்கவும் முடியவில்லை. காங்கிரசின் மேல் அவருக்கே அந்த அளவுக்கு நம்பிக்கை!

நேசமணி ஏன் காலமானார்? என்றே எண்ணிப் பதறுகிறாரோ என்னவோ தெரியவில்லை! இன்னமும் அவர் வாயிலிருந்து 'முடிவு' பிறக்கவில்லை!

எவை எவற்றிலிருந்து விலகிப் போகிறோமோ, அவை அவற்றினால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும் விலகிக்கொள்ள முடியும் என்பது குறட்பாவாகவிருந்து எச்சரித்துக்கொண்டிருக்கிற வேளையிலேயே குழப்பத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறார் அவர். காரணம், சூழ்நிலைகளுக்குத் தம் இதயத்தில் அதிக இடம் ஒதுக்கிவிட்டு, காங்கிரசைத்தள்ளிவைத்து விட்டதனால் தானே என்னவோ!

இனிமேல் சுற்றிப்பார்த்தோ, அல்லது ஊர்வலம் வராமலேயோ, அவர் எப்படி ஒரு முடிவுகூறினாலும், அது சூழ் நிலைகளின்மேல் எடுக்கப்பட்ட முடிவாகத் தானிருக்க முடியுமே ஒழிய, காங்கிரசுக்கு உகந்த நற்செயலாக அது தீர்மானிக்கப்பட ஏதுவாகாது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

காமராசர் அரசியல்வாதியாகையால் யாதனின் யாதனின் என்ற குறட்பாவை அவர் பின்பற்ற முடியாது! பின்பற்றவும் மாட்டார்!!

ஜடாமுடி தரித்து வன விலங்குகளோடு விலங்கொன்றாய் வாழ்வோர் என்று வருணிக்கப்படுபவர்களே ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டுப் போவார்கள் என்றால், இந்த காமராசரை மட்டும் அவை சும்மா விட்டுவிடுமா? இடும்பைகள்தான் இடும்பைப்பட்டு விடுமா?

காமராசருக்கு இப்படியும் ஒரு நிலைமை ஏற்பட வேண்டும்; அவரது முகாம் எதிரிகள் என்று வருணிக்கப்படுவோர் மனம் பரந்து செயல்பட வேண்டுமென்பது காலத் தச்சன் கட்டளை போலும்! நமக்கேன் அந்தக் கணிப்பெல்லாம் நண்பா!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

எதிர்க்கட்சி இலக்கணம்!

கொடுக்காதே! கொடுக்காதே!!

தி. மு. கழகம் எதிர்க்கட்சியாய் இருந்தபோது ஆளும் கட்சியாயிருந்த காங்கிரஸ், ஆட்சிக்கு நல்ல யோசனைகளைத் தாருங்கள்; ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் இன்று அவர்கள் எதிர்க் கட்சியாயிருக்கிறார்கள்; யோசனை சொல்லவோ — ஒத்துழைப்புத் தரவோ அஞ்சுகிறார்கள்; தயங்குகிறார்கள்; மறுக்கிறார்கள்!

காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தை ஆண்டபோது தி. மு. கழகம், மத்திய அரசை நோக்கி தமிழகத்திற்கு ஓரவஞ்சனை செய்யாதே! உதவிகளைச் செய்!' என்று முழக்கமிட்டது.

அதேபோன்று மாநில அரசை நோக்கி மத்திய அரசுடன் துணிவோடு கேளுங்கள்; உதவி பெறுங்கள்; நாங்கள் உங்களுக்கு அந்த விஷயத்தில் உறுதுணையாயிருக்கிறோம்; போராடுங்கள்' என்று கூறியது.

டில்லிக்கு அப்போது போன காங்கிரசு அமைச்சர்கள்கூட மத்திய அரசிடம் நீங்கள் ஏதாவது உதவி செய்யாவிட்டால் தி. மு. கழகம் பெருங்கூச்சல் போடும்! மக்கள் அந்தப் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்று கூறித்தான் உதவி பெற்று வந்தது.

எங்களைக் காட்டி மத்திய அரசிடம் உதவி பெறும் அளவிற்கு — நாடு நலம்பெறும் அளவிற்கு நடந்து கொண்டோம் அப்போது!

ஆனால்—இப்போது எதிர்க் கட்சியாய் காங்கிரஸ் இருக்கிறதே என்ன செய்கிறது?

நாங்கள் ஏதாவது மத்திய அரசிடம் உதவி கேட்டால் அதற்கு இடையூறாக இருந்து கொடுக்காதே என்று கூறுகிறார்கள். எங்களைப் பார்த்து உங்களுக்கேன் உதவி என்று கேட்கிறார்கள்.

நாங்கள் எதிர்க்கட்சியாயிருந்தபோது மத்திய அரசைப் பார்த்து 'கொடு; கொடு' என்றோம்' மாநில அரசைப் பார்த்து 'கேள், கேள்' என்றோம்,

ஆனால் இப்போது காங்கிரசுக் கட்சியோ எங்களைப் பார்த்து 'கேட்காதே! கேட்காதே!' என்கிறது. மத்திய அரசைப் பார்த்து 'கேட்டாலும் கொடுக்காதே! கொடுக்காதே!' என்று கூவுகிறது.

இது எதைக் காட்டுகிறது? தி.மு. கழகம் நாட்டு நிலை உயர்த்த குரல் கொடுக்கும் கழகம்; காங்கிரஸ் கட்சிக் கண்ணோட்டத்துடன் குரல் கொடுக்கும் கட்சி என்பதைத் தானே?

மொழிப் பிரச்சினையில் முன்னாள் முதலமைச்சர் டில்லி செல்லவிருந்தார் முன்பு. அப்போது சட்டமன்றத்தில் வாழ்த்தி வழியனுப்பினேன்.

"முதலமைச்சர் அவர்களே! சேக்கிழார் வழி வந்தவரே! தமிழ்த்திருநாட்டின் முதல்வரே! டில்லியில் நீங்கள் தமிழ் நாட்டின் குரலை எழுப்பி இந்தியைத் திணிக்கக் கூடாது என்று அஞ்சாமல் கூறிட வேண்டும் உங்களுக்குப் பின்னால் தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கிறது; நான்கு கோடி மக்களின ஆதரவு இருக்கிறது.

"வடபுலம் சென்று வெற்றிக் கொடி நாட்டிய சேரன் செங்குட்டுவனின் வீர உணர்வு பெற்று தன்னந்தனியனாய் நின்று போரிட்ட தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் உறுதி பெற்று 'இந்தியை ஏற்க மாட்டோம்' என்று நெஞ்சு நிமர்த்திக் கூறிவிட்டு வாருங்கள்.

"என் கையெலும்பை எடுத்து உங்களுக்குச் சிலை அமைக்கிறேன்'' என்று கூறினேன். என்மீதுள்ள ஆசையினாலோ அனுதாபத்தினாலோ—பக்தவத்சலம் அவர்கள் அப்படிக் கூறவில்லை, ஒரு வேளை அப்படிக் கூறி விட்டால் இந்தப்பாவி கருணாநிதி கையெலும்பு போய் விடுமே—என்ற கருணையினாலோ—என்னவோ டில்லியில் அவர் "இந்தி தாராளமாக வரட்டும்; நடை பாவாடை விரிக்க நாங்கள் தயார்; பொங்கல்—புளியோதரை படைக்க நாங்கள் தயார்! எப்போது வருகிறாள் இந்தி மாதா?' என்று கேட்டுவிட்டுத் திரும்பினார். இது காங்கிரசின் படம்.

ஆனால் தி. மு. கழகம் பொறுப் பேற்றதும் அமைச்சர் மாதவன் டில்லி சென்றபோது மொரார்ஜி இந்தியை தமிழகம் ஏற்கவேண்டும் —என்று கூறினார். அப்போது மாதவன் இந்தியை ஒருபோதும் தமிழகம் ஏற்காது — என்று வீர கர்ஜனை புரிந்தார்.

வெறும் அமைச்சர் மாதவனின் குரல் அல்ல அது: நாலரைக்கோடி தமிழ் மக்களின் குரல்; அண்ணாவின் படைவரிசை எழுப்பிய குரல்!

அதுமட்டுமா; இந்தி இங்கு இல்லை என்று புகழ்பெற்ற இருமொழித் தீர்மானத்தை நிறைவேற்றியனுப்பியது கழகம்.

பெண்!

பெண், எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள்; ஆனால் பெரும் புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள், --வேட்லி.

மனிதர்கள், பெண்களின் விளையாட்டுக் கருவிகள்; பெண்கள், சைத்தானின் விளையாட்டுக் கருவிகள்.

—விக்டர் ஹியூகோ.

பெண் உலகத்தில் செய்ய வேண்டியதெல்லாம், ஒரு மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், தாயாகவும் தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டியதே யாகும். —ஸ்டீல்

ஆனால், அந்த உரிமை உணர்வு மிக்கத் தீர்மானத்தை அரசியல் மோசடி என்று வர்ணித்தது காங்கிரஸ்!

இது மொழிப்பிரச்சினையில் காங்கிரசுக்கும் தி. மு. கழகத்திற்குமுள்ள வேற்றுமையைக் காட்டும் படங்கள்.

அடுத்துப் பெருந்தன்மை எனும் விஷயத்தில் காங்கிரசின் படம் எப்படிப்பட்டது; கழகத்தின் படம் எப்படிப்பட்டது?

சென்னை மாநகராட்சிப் பொறுப்பை கழகம் ஏற்றுக் கொண்டதும் காமராசருக்கும் அவரது அரசியல் குரு சத்தியமூர்த்திக்கும் சிலைவைத்து பண்டித நேரு அவர்களைக் கொண்டு அந்தச் சிலைகளைத் திறக்கச் செய்து தனது அரசியல் பெருந்தன்மையை வெளிப்படுத்தியது கழகம்.

ஆனால் அதே மாநகராட்சியில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் தரப்பட வேண்டும் என்ற தீர்மானம் வந்த போது காங்கிரஸ்காரர்கள் 'வரவேற்புப்பத்திரம் தரவேண்டிய அளவுக்கு அண்ணாத்துரைக்கு என்ன தகுதி?' என்று கேட்டார்கள். வெளிநடப்பும் செய்தார்கள். தங்களுடைய அரசியல் பெருந்தன்மை இன்மையைக் காட்டிக்கொண்டார்கள்.

விலைவாசி உயர்வுக் கண்டன அறப்போரில் கலந்துகொண்ட காரணத்தால் வி. எஸ். கோவிந்தராசன் அலமேலு அப்பாத்துரை இப்போதைய துணைமேயர் கோவிந்தசாமி ஆகியோர் சிறைவாசம் ஏற்றார்கள். அதனால் மாநகராட்சியின் மூன்று கூட்டங்களுக்கு அவர்களால் செல்ல இயலவில்லை.

மூன்று கூட்டங்களுக்கு ஒரு உறுப்பினர் வராவிட்டால்பதவி இழப்பார் என்பது சட்டம். ஆனால் மாநகராட்சி விரும்பினால் அவர்களை எடுத்துக்கொள்ளலாம்.

காங்கிரசுக் கட்சி இந்த மூவரும் மீண்டும் உறுப்பினர்களாவதைத் தடுத்தது; நீதிமன்றம் வரை சென்று அவர்களை மாநகராட்சிக்குள் விடாமல் தடுத்தது.

ஆனால் — கிருஷ்ணமணி என்ற காங்கிரசு உறுப்பினர் மூன்று கூட்டங்களுக்கு வராமல் இருந்தார். அவர்களாவது ஜெயிலில் இருந்த காரணத்தால் வரவில்லை; இவர் வெளியிலிருந்தும் வரவில்லை; அவ்வளவு அக்கறை பொதுப்பணியில்!

இருந்த போதிலும் அந்த உறுப்பினரை மீண்டும் மாநகராட்சி எடுத்துக்கொள்ளலாம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆலோசனை கூறினார்.

பெருந்தன்மையற்ற கூட்டத்திற்குத்தனது ஒப்பற்றபெருந்தன்மையின் மூலம் பாடம் போதித்தார் அண்ணா.

அத்தகைய பெருந்தன்மைப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாங்கள்.

எங்களுக்குக் கிடைத்த மேயர் அந்தஸ்தையோ அமைச்சர் பதவியையோ பெரிதென நம்பி எங்களை விட யாரும் உயர்ந்தவரில்லை என்று கருதினால் எங்களைப்போல் ஏமாளிகள் — சோணகிரிகள் உலகில் இல்லை.

அமைச்சர் பதவியும், மேயர் பதவியும் பொதுப்பணியாற்ற எங்களுக்குக்கிடைத்த வாய்ப்பு; பொது மக்கள் இட்ட உத்திரவு; காலால் அவர்கள் இட்ட உத்திரவை தலையால் செய்து முடிக்கவேண்டியவர்கள் நாங்கள்.

இந்தப் பதவி கிடைத்தது; இதை வைத்து சுயலாப வேட்டையாடி சுகபோகங்களை இருந்தவரை அனுபவிப்போம் என்று நினைப்பவர்கள் அல்ல நாங்கள்.

ஏனெனில் நாங்கள் அப்படிப்பட்ட எளிமையின் தலைவனால் வளர்க்கப்பட்ட தொண்டர்கள். எங்கள் அண்ணனின் அரவணைப்பில் வளர்ந்த தம்பிகள் நாங்கள்.

—சென்னைக் கூட்டத்தில்
கலைஞர் மு. கருணாநிதி.

★

குறை நீங்கும்!

தாவிவரும் மேகங்களைத் தழுவுகின்ற மலைகள்—இன்பம்
தந்துதவி பழம்பெருமைச் சிறப்புரைக்கும் கலைகள்
கூவிமகிழ் இசைஎழுப்பி மயக்குகின்ற குயில்கள்—சோலைக்
கோகிலங்கள் இசையறிந்து நடம்புரியும் மயில்கள்
பூவிலுறை தேனெடுத்து மணம்பரப்பும் தென்றல்—தமிழின்
புகழ்பரப்ப வீதியெங்கும் நிறுவப்படும் மன்றம்!
ஆவிதன்னைக் கற்பில்கொண்டு அகமகிழும் பெண்டிர்—இவை
அத்துணையும் தமிழகமாம் நாட்டினிலே கண்டீர்!

தேவமறைக் குறள்பணிக்கும் தெள்ளியநல் ஆட்சி—கெட்ட
தேரலரும் தமைமறந்து உவகையுறும் காட்சி!
பாவலர்கள் பண்டிதர்கள் போற்றப்படும் பெருமை—கிராமம்
பாங்கடையத் தொண்டுசெய்யும் சீரணியின் அருமை!
நோவறியாப் பொதுநலங்கள் ஊறுகின்ற புதுமை—அறிவு
நூல்நெறியில் அன்றுடம் சமைக்கவல்ல பொதுமை!
தாயறியா அன்புதன்னைக் காட்டவல்ல அண்ணன்—இன்று
தலைமைஏற்று அரசுசெய்யும் தமிழகத்தைக் காணீர்!

ஏந்திநிற்கும் காந்திநெறி ஏற்றமதை ஈக்கும்—மக்கள்
ஏழ்மையினை அறிஞரது தருமசிந்தை போக்கும்!
நீந்திச்செல்ல இன்பமென்னும் தேனாறு பாயும்—நாம்
நினைப்பதெல்லாம் நடக்கும்இனித் தொல்லைப்பிணி ஓயும்!
சாந்திஎங்கும் சத்தியத்தின் பேரொளியில் துலங்கும்—இந்தச்
சமுதாயம் சரித்திரத்தின் புகழ்வடிவில் இலங்கும்!
காந்தியில்லை என்றகுறை சத்தியமாய் நீங்கும்—திருக்
காஞ்சிநகர்ப் புதல்வனாலே தமிழகமே ஓங்கும்!

—காரை நா. பூமிநாதன்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.